# thiruththoNDar purANam (periya purANam) panniraNDAm tirumuRai

## (in tamil script, TSCII format)

## சேக்கிழார் அருளிய

# திருத்தொண்டர் புராணம் என்ற பெரிய புராணம்

## பன்னிரண்டாம் திருமுறை

### முதற் காண்டம்

# 3 இலை மலிந்த சருக்கம்

---

This page is courtasy of Project Madurai. This thirumuRai is being proof-read. So this current form may have errors in it.

---

periya puranam in tscii format file generated from Koeln version using convertor (two corrections n2 and jn) file yet to be proof/read file edited to be in TSCII 1.7 ENCODING ------------------------------------------------


| Periya puranam text | | | |
|---|---|---|---|
| Chapter No. | Transliterated text | TSCII HTML format | Tamil PDF |
| 1 | thirumalaic carukkam | திருமலைச் சருக்கம் | PDF |
| 2 | thillaivAzandhaNar carukkam | தில்லைவாழந்தணர் சருக்கம் | PDF |
| 3 | ilaimalintha carukkam | இலைமலிந்த சருக்கம் | PDF |
| 4 | mummaiyAl ulakANDa carukkam | மும்மையால் உலகாண்ட சருக்கம் | PDF |
| 5 | thiruninRa carukkam | திருநின்ற சருக்கம் | PDF |

| | | | |
|---|---|---|---|
| 6 | vambaRA varivaNDu carukkam - thirunyAna cambanthar purANam | வம்பறா வரிவண்டு சருக்கம் - திருஞானசம்பந்தர் புராணம் | PDF |
| | vambaRA varivaNDu carukkam - EyarkOn muthalAya nAyanmArkaL | வம்பறா வரிவண்டு சருக்கம் - ஏயர்கோன் முதலாய நாயன்மார்கள் | PDF |
| 7 | vArkoNDa vanamulaiyAL carukkam | வார்கொண்ட வனமுலையாள் சருக்கம் | PDF |
| 8 | poyyaDimaiyillAtha pulavar carukkam | பொய்யடிமை இல்லாத புலவர் சருக்கம் | PDF |
| 9 | kaRaikkaNDan carukkam | கறைக்கண்டன் சருக்கம் | PDF |
| 10 | kaDal cUzntha carukkam | கடல் சூழ்ந்த சருக்கம் | PDF |
| 11 | paththarAyp paNivAr carukkam | பத்தராய்ப் பணிவார் சருக்கம் | PDF |
| 12 | manniyacIrc carukkam | மன்னியசீர்ச் சருக்கம் | PDF |
| 13 | veLLAnaic carukkam | வெள்ளானைச் சருக்கம் | PDF |


# 3 இலை மலிந்த சருக்கம்

8 எறி பத்த நாயனார் புராணம்

1. மல்லர் நீர் ஞாலம் தன்னுள் மழவிடை உடையான் அன்பர்க்கு 0551-1
ஒல்லை வந்து உற்ற செய்கை உற்று இடத்து உதவும் நீரார் 0551-2
எல்லை இல் புகழின் மிக்க எறிபத்தர் பெருமை எம்மால் 0551-3
சொல்லல் ஆம் படித்து அன்று ஏனும் ஆசையால் சொல்லல் உற்றாம் 0551-4

2. பொன் மலைப் புலி வென்று ஓங்கப் புதுமலை இடித்துப் போற்றும் 0552-1
அந் நெறி வழியே ஆக அயல் வழி அடைத்த சோழன் 0552-2
மன்னிய அநபாயன் சீர் மரபின் மா நகரம் ஆகும் 0552-3
தொன் நெடும் கருவூர் என்னும் சுடர் மணி வீதி மூதூர் 0552-4

3. மா மதில் மஞ்சு சூழும் மாளிகை நிரை விண் சூழும் 0553-1
தூ மணி வாயில் சூழும் சோலையில் வாசம் சூழும் 0553-2
தே மலர் அளகம் சூழும் சில மதி தெருவில் சூழும் 0553-3
தாம் மகிழ்ந்து அமரர் சூழும் சதமகன் நகரம் தாழ 0553-4

4. கட கரி துறையில் ஆடும் களி மயில் புறவில் ஆடும் 0554-1

அடர் மணி அரங்கில் ஆடும் அரிவையர் குழல் வண்டு ஆடும் 0554-2
படர் ஒளி மறுகில் ஆடும் பயில் கொடி கதிர் மீது ஆடும் 0554-3
தடம் நெடும் புவி கொண்டாடும் தனி நகர் வளமை ஈதால் 0554-4

5. மன்னிய சிறப்பின் மிக்க வள நகர் அதனில் மல்கும் 0555-1
பொன் இயல் புரிசை சூழ்ந்து சுரர்களும் போற்றும் பொற்பால் 0555-2
துன்னிய அன்பின் மிக்க தொண்டர் தம் சிந்தை நீங்கா 0555-3
அந்நிலை அரனார் வாழ்வது ஆனிலை என்னும் கோயில் 0555-4

6. பொருள் திரு மறை கடந்த புனிதரை இனிது அக் கோயில் 0556-1
மருள் துறை மாற்றும் ஆற்றால் வழி படும் தொழிலர் ஆகி 0556-2
இருள் கடு ஒருங்கு கண்டத்து இறையவர்க்கு உரிமை பூண்டார்க்கு 0556-3
அருள் பெரும் தொண்டு செய்வார் அவர் எறிபத்தர் ஆவார் 0556-4

7. மழை வளர் உலகில் எங்கும் சைவம் ஓங்க 0557-1
அழல் அவிர் சடையான் அன்பர்க்கு அடாதன அடுத்த போது 0557-2
முழை அரி என்னத் தோன்றி முரண் கெட எறிந்து தீர்க்கும் 0557-3
பழை மறை பரசும் தூய பரசு முன் எடுக்கப் பெற்றார் 0557-4

8. அண்ணலார் நிகழும் நாளில் ஆன் நிலை அடிகளார்க்குத் 0558-1
திண்ணிய அன்பு கூர்ந்த சிவகாமி ஆண்டார் என்னும் 0558-2
புண்ணிய முனிவனார் தாம் பூப் பறித்து அலங்கல் சாத்தி 0558-3
உள் நிறை காதலோடும் ஒழுகுவார் ஒரு நாள் முன் போல் 0558-4

9. வைகறை உணர்ந்து போந்து புனல் மூழ்கி வாயும் கட்டி 0559-1
மெய்ம் மலர் நெருங்கு வாச நந்த வனத்து முன்னிக் 0559-2
கையினில் தெரிந்து நல்ல கமழ் முகை அலரும் வேலைத் 0559-3
தெய்வ நாயகருக்குச் சாத்தும் திருப் பள்ளித் தாமம் செய்து 0559-4

10. கோலப் பூம் கூடை தன்னை நிறைத்தனர் கொண்டு நெஞ்சில் 0560-1
வாலிய நேசம் கொண்டு மலர்க் கையில் தண்டும் கொண்டு அங்கு 0560-2
ஆலயம் அதனை நோக்கி அங்கு அணர் அமைத்துச் சாத்தும் 0560-3
காலை வந்து உதவ வேண்டிக் கடிதினில் வாரா நின்றார் 0560-4

1.1 மற்றவர் அணைய இப்பால் வளநகர் அதனில் மன்னும் 0561-1
கொற்றவர் வளவர் தங்கள் குலப் புகழ்ச் சோழனார் தம் 0561-2
பற்றலர் முனைகள் சாய்க்கும் பட்ட வர்த்தனம் ஆம் பண்பு 0561-3
பெற்ற வெம் களிறு கோலம் பெருகு மா நவமி முன்னாள் 0561-4

12. மங்கல விழைவு கொண்டு வரு நதித் துறை நீராடிப் 0562-1
பொங்கிய களிப்பினோடும் பொழி மதம் சொரிய நின்றார் 0562-2
எங்கணும் இரியல் போக எதிர் பரிக் காரர் ஓடத் 0562-3
துங்க மால் வரை போல் தோன்றித் துண்ணென அணைந்தது அன்றே 0562-4

13. வென்றி மால் யானை தன்னை மேல் கொண்ட பாகரோடும் 0563-1
சென்று ஒரு தெருவின் முட்டிச் சிவகாமியார் முன் செல்ல 0563-2
வன் தனித் தண்டில் தூங்கும் மலர் கொள் பூக் கூடை தன்னைப் 0563-3
பின் தொடர்ந்து ஓடிச் சென்று பிடித்து முன் பறித்துச் சிந்த 0563-4

14. மேல் கொண்ட பாகர் கண்டு விசை கொண்ட களிறு சண்டக் 0564-1
கால் கொண்டு போவார் போலக் கடிது கொண்டு அகலப் போக 0564-2
நூல் கொண்ட மார்பின் தொண்டர் நோக்கினர் பதைத்துப் பொங்கி 0564-3
மால் கொண்ட களிற்றின் பின்பு தண்டு கொண்டு அடிக்க வந்தார் 0564-4

15. அப்பொழுது அணைய ஒட்டாது அடற் களிறு அகன்று போக 0565-1
மெய்ப் பொருள் தொண்டர் மூப்பால் விரைந்து பின் செல்ல மாட்டார் 0565-2
தப்பினர் விழுந்து கையால் தரை அடித்து எழுந்து நின்று 0565-3
செப்பு அரும் துயரம் நீடிச் செயிர்த்து முன் சிவதா என்பார் 0565-4

16. களி யானையின் ஈர் உரியாய் சிவதா 0566-1
எளியார் வலியாம் இறைவா சிவதா 0566-2
அளியார் அடியார் அறிவே சிவதா 0566-3
தெளிவார் அமுதே சிவதா சிவதா 0566-4

17. ஆறும் மதியும் அணியும் சடை மேல் 0567-1
ஏறும் மலரைக் கரி சிந்துவதே 0567-2
வேறு உள் நினைவார் புரம் வெந்து அவியச் 0567-3
சீறும் சிலையாய் சிவதா சிவதா 0567-4

18. தஞ்சே சரணம் புதுகும் தமியோர் 0568-1
நெஞ்சேய் துயரம் கெட நேர் தொடரும் 0568-2
மஞ்சே என வீழ் மறலிக்கு இறை நீள் 0568-3
செம் சேவடியாய் சிவதா சிவதா 0568-4

19. நெடியோன் அறியா நெறியார் அறியும் 0569-1
படியால் அடிமைப் பணி செய்து ஒழுகும் 0569-2
அடியார்களில் யான் ஆரா அணைவாய் 0569-3
முடியா முதலாய் எனவே மொழிய 0569-4

20. என்று அவர் உரைத்த மாற்றம் எறி பத்தர் எதிரே வாரா 0570-1
நின்றவர் கேளா மூளும் நெருப்பு உயிர்த்து அழன்று பொங்கி 0570-2
மன்றவர் அடியார்க்கு என்றும் வழிப் பகை களிறே அன்றோ 0570-3
கொன்று அது வீழ்ப்பன் என்று கொலை மழு எடுத்து வந்தார் 0570-4

21. வந்தவர் அழைத்த தொண்டர் தமைக் கண்டு வணங்கி உம்மை 0571-1
இந்த வல் இடும்பை செய்த யானை எங்கு உற்றது என்ன 0571-2
எந்தையார் சாத்தும் பூவை என் கையில் பறித்து மண் மேல் 0571-3
சிந்தி முன் பிழைத்துப் போகா நின்றது இத் தெருவே என்றார் 0571-4

2.2 இங்கு அது பிழைப்பது எங்கே இனி என எரி வாய் சிந்தும் 0572-1
அம் கையின் மழுவும் தாமும் அனலும் வெம் காலும் என்னப் 0572-2
பொங்கிய விசையில் சென்று பொரு கரி தொடர்ந்து பற்றும் 0572-3
செம் கண் வாள் அரியிற் கூடிக் கிடைத்தனர் சீற்றம் மிக்கார் 0572-4

23. கண்டவர் இது முன்பு அண்ணல் உரித்த அக் களிறே போலும் 0573-1
அண்டரும் மண் உளோரும் தடுக்கினும் அடர்த்துச் சிந்தத் 0573-2
துண்டித்துக் கொல்வேன் என்று சுடர் மழு வலத்தில் வீசிக் 0573-3
கொண்டு எழுந்து ஆர்த்துச் சென்று காலினால் குலுங்கப் பாய்ந்தார் 0573-4

24. பாய்தலும் மிசை கொண்டு உய்க்கும் பாகரைக் கொண்டு சீறிக் 0574-1
காய் தழல் உமிழ் கண் வேழம் திரிந்து மேல் கதுவ அச்சம் 0574-2
தாய் தலை அன்பின் முன் நிற்குமே தகைந்து பாய்ந்து 0574-3
தோய் தனித் தடக்கை வீழ மழுவினால் துணித்தார் தொண்டர் 0574-4

25. கையினைத் துணித்த போது கடல் எனக் கதறி வீழ்ந்து 0575-1
மை வரை அனைய வேழம் புரண்டிட மருங்கு வந்த 0575-2
வெய்ய கோல் பாகர் பாகர் மூவர் மிசை கொண்டார் இருவர் ஆக 0575-3
ஐவரைக் கொன்று நின்றார் அருவரை அனைய தோளார் 0575-4

26. வெட்டுண்டு பட்டு வீழ்ந்தார் ஒழிய மற்று உள்ளம் ஓடி 0576-1
மட்டு அவிழ் தொங்கல் மன்னன் வாயில் காவலரை நோக்கி 0576-2
பட்ட வர்த்தனமும் பட்டுப் பாகரும் பட்டார் என்று 0576-3
முட்ட நீர் கடிது புக்கு முதல்வனுக்கு உரையும் என்றார் 0576-4

27. மற்று அவர் மொழிந்த மாற்றம் மணிக் கடை காப்போர் கேளாக் 0577-1
கொற்றவன் தன்பால் எய்திக் குரை கழல் பணிந்து போற்றிப் 0577-2

பற்றலர் இலாதாய் நின் பொன் பட்ட மால் யானை வீழச் 0577-3
செற்றனர் சிலராம் என்று செப்பினார் பாகர் என்றார் 0577-4

28. வளவனும் கேட்ட போதில் மாறு இன்றி மண் காக்கின்ற 0578-1
கிளர் மணித் தோள் அலங்கல் சுரும்பு இனம் கிளர்ந்து பொங்க 0578-2
அளவில் சீற்றத்தினாலே யார் செய்தார் என்றும் கேளான் 0578-3
இள அரி ஏறு போல எழில் மணி வாயில் நீங்க 0578-4

29. தந்திரத் தலைவர் தாமும் தலைவன் தன் நிலைமை கண்டு 0579-1
வந்து உறச் சேனை தன்னை வல் விரைந்து எழ முன் சாற்ற 0579-2
அந்தரத்து அகலம் எல்லாம் அணி துகில் பதாகை தூர்ப்ப 0579-3
எந்திரத் தேரும் மாவும் இடை இடை களிறும் ஆகி 0579-4

30. வில்லொடு வேல் வாள் தண்டு பிண்டி பாலங்கள் மிக்க 0580-1
வல் எழும் உசலம் நேமி மழுக் கழுக் கடை முன் ஆன 0580-2
பல் படைக் கலன்கள் பற்றிப் பைங்கழல் வரிந்த வன் கண் 0580-3
எல்லையில் படைஞர் கொட்புற்று எழுந்தனர் எங்கும் எங்கும் 0580-4

31. சங்கொடு தாரை காளம் தழங்கு ஒலி முழங்கு பேரி 0581-1
வெம் குரல் பம்பை கண்டை வியன் துடி திமிலை தட்டி 0581-2
பொங்கு ஒலிச் சின்னம் எல்லாம் பொரு படை மிடைந்த பொற்பின் 0581-3
மங்குல் வான் கிளர்ச்சி நாண மருங்கு எழுந்து இயம்பி மல்க 0581-4

32. தூரியத் துவைப்பும் முட்டும் சுடர்ப் படை ஒலியும் மாவின் 0582-1
தார் மணி இசைப்பும் வேழ முழக்கமும் தடம் தேர்ச் சீரும் 0582-2
வீரர் தம் செருக்கின் ஆர்ப்பும் மிக்கு எழுந்து ஒன்றாம் எல்லைக் 0582-3
காருடன் கடைநாள் பொங்கும் கடல் எனக் கலித்த அன்றே 0582-4

3.3 பண் உறும் உறுப்பு நான்கில் பரந்து எழு சேனை எல்லாம் 0583-1
மண் இடை இறு கால் மேல் மேல் வந்து எழுந்தது போல் தோன்ற 0583-2
தண் அளிக் கவிகை மன்னன் தானை பின் தொடரத் தானோர் 0583-3
அண்ணல் அம் புரவி மேற்கொண்டு அரச மா வீதி சென்றான் 0583-4

34. கடு விசை முடுகிப் போகிக் களிற் றொடும் பாகர் வீழ்ந்த 0584-1
படு களம் குறுகச் சென்றான் பகை புலத்து அவரைக் காணான் 0584-2
விடு சுடர் மழு ஒன்று ஏந்தி வேறு இரு தடக் கைத்து ஆய 0584-3
அடு களிறு என்ன நின்ற அன்பரை முன்பு கண்டான் 0584-4

35. பொன் தவழ் அருவிக் குன்றம் எனப் புரள் களிற்றின் முன்பு 0585-1
நின்றவர் மன்றுள் என்றும் நிருத்தமே பயிலும் வெள்ளிக் 0585-2
குன்றவர் அடியார் ஆனார் கொற்றவர் இவர் என்று ஓரான் 0585-3
வென்றவர் இவர் யாவர் என்றான் வெடிபட முழங்கும் சொல்லான் 0585-4

36. அரசன் ஆங்கு அருளிச் செய்ய அருகு சென்று அணைந்து பாகர் 0586-1
விரை செய்தார் மாலையோய் நின் விறற் களிற்று எதிரே நிற்கும் 0586-2
திரை செய் நீர் உலகின் மன்னர் யாருளார் தீங்கு செய்தார் 0586-3
பரசு முன் கொண்டு நின்ற இவர் எனப் பணிந்து சொன்னார் 0586-4

37. குழை அணி காதினானுக்கு அன்பராம் குணத்தின் மிக்கார் 0587-1
பிழை படின் அன்றிக் கொல்லார் பிழைத்தது உண்டு என்று உட்கொண்டு 0587-2
மழை மத யானைச் சேனை வரவினை மாற்றி மற்ற 0587-3
உழை வயப் புரவி மேல் நின்று இழிந்தனன் உலக மன்னன் 0587-4

38. மைத் தடம் குன்று போலும் மதக் களிற்று எதிரே இந்த 0588-1
மெய்த்தவர் சென்ற போது வேறு ஒன்றும் புகுதா விட்ட 0588-2
அத் தவம் உடையேன் ஆனேன் அம்பல வாணர் அன்பர் 0588-3
இத்தனை முனியக் கெட்டேன் என் கொளோ பிழை என்று அஞ்சி 0588-4

39. செறிந்தவர் தம்மை நீக்கி அன்பர் முன் தொழுது சென்று ஈது 0589-1
அறிந்திலேன் அடியேன் அங்கு கேட்டது ஒன்று அதுதான் நிற்க 0589-2
மறிந்த இக் களிற்றின் குற்றம் பாகரோடு இதனை மாள 0589-3
எறிந்ததே போதுமோதான் அருள் செய்யும் என்று நின்றார் 0589-4

40. மன்னவன் தன்னை நோக்கி வானவர் ஈசர் நேசர் 0590-1
சென்னி இத் துங்க வேழம் சிவகாமி ஆண்டார் கொய்து 0590-2
பன்னக ஆபரணர் சாத்தக் கொடுவரும் பள்ளித் தாமம் 0590-3
தன்னை முன் பறித்துச் சிந்தத் தரை படத் துணித்து வீழ்த்தேன் 0590-4

41. மாதங்கம் தீங்கு செய்ய வரு பரிக்காரர் தாமும் 0591-1
மீது அங்கு கடாவுவாரும் விலக்கிடது ஒழிந்து பட்டார் 0591-2
ஈது இங்கு நிகழ்ந்தது என்றார் எறி பத்தர் என்ன அஞ்சிப் 0591-3
பாதங்கள் முறையால் தாழ்ந்து பருவரைத் தாடந்தோள் மன்னன் 0591-4

42. அங்கணர் அடியார் தம்மைச் செய்த இவ் அபராதத்துக்கு 0592-1
இங்கு இது தன்னால் போதாது என்னையும் கொல்ல வேண்டும் 0592-2
மங்கல மழுவால் கொல்கை வழக்கும் அன்று இதுவாம் என்று 0592-3
செங்கையால் உடைவாள் வாங்கிக் கொடுத்தனர் தீர்வு நேர்வார் 0592-4

43. வெம் தழல் சுடர் வாள் நீட்டும் வேந்தனை நோக்கிக கெட்டேன் 0593-1
அந்தம் இல் புகழான் அன்புக்கு அளவின்மை கண்டேன் என்று 0593-2
தந்த வாள் வாங்க மாட்டார் தன்னைத் தான் துறக்கும் என்று 0593-3
சிந்தையால் உணர்வு உற்று அஞ்சி வாங்கினார் தீங்கு தீர்ப்பார் 0593-4

4.4 வாங்கிய தொண்டர் முன்பு மன்னனார் தொழுது நின்றே 0594-1
ஈகு எனை வாளினால் கொன்று என் பிழை தீர்க்க வேண்டி 0594-2
ஓங்கிய உதவி செய்யப் பெற்றனன் இவர் பால் என்றே 0594-3
ஆங்கு அவர் உவப்பக் கண்ட எறிபத்தர் அதனுக்கு அஞ்சி 0594-4

45. வன் பெரும் களிறு பாகர் மடியவும் உடை வாளைத் தந்து 0595-1
என் பெரும் பிழையினால் ஏ என்னையும் கொல்லும் என்னும் 0595-2
அன்பனார் தமக்குத் தீங்கு நினைந்தனன் என்று கொண்டு 0595-3
முன்பு எனது உயிர் செகுத்து முடிப்பதே முடிவு என்று எண்ணி 0595-4

46. புரிந்தவர் கொடுத்த வாளை அன்பர் தம் கழுத்தில் பூட்டி 0596-1
அரிந்திடல் உற்ற போதில் அரசனும் பெரியோர் செய்கை 0596-2
இருந்தவாறு என் கெட்டேன் என்று எதிர் கடிதிற் சென்று 0596-3
பெரும் தாடம் தோளால் கூடிப் பிடித்தனன் வாளும் கையும் 0596-4

47. வளவனார் விடாது பற்ற மாதவர் வருந்து கின்ற 0597-1
அளவு இலாப் பரிவில் வந்த இடுக்கணை அகற்ற வேண்டிக் 0597-2
கள மணி களத்துச் செய்ய கண்ணுதல் அருளால் வாக்குக் 0597-3
கிளர் ஒளி விசும்பின் மேல் வந்து எழுந்தது பலரும் கேட்ப 0597-4

48. தொழும் தகை அன்பின் மிக்கீர் தொண்டினை மண் மேல் காட்டச் 0598-1
செழும் திரு மலரை இன்று சினக் கரி சிந்தத் திங்கள் 0598-2
கொழுந்து அணி வேணிக் கூத்தர் அருளினால் கூடிற்று என்று அங்கு 0598-3
எழுந்தது பாகரோடும் யானையும் எழுந்தது அன்றே 0598-4

49. ஈரவே பூட்டும் வாள் விட்டு எறிபத்தர் தாமும் அந்த 0599-1
நேரியர் பெருமான் தாள் மேல் விழுந்தனர் நிருபர் கோனும் 0599-2
போர் வடி வாளைப் போக எறிந்து அவர் கழல்கள் போற்றிப் 0599-3
பார்மிசை பணிந்தான் விண்ணோர் பனிமலர் மாரி தூர்த்தார் 0599-4

50. இருவரும் எழுந்து வானில் எழுந்த பேரொலியைப் போற்ற 0600-1
அருமறை பொருளாய் உள்ளார் அணிகொள் பூம் கூடை தன்னில் 0600-2
மருவிய பள்ளித் தாமம் நிறைந்திட அருள மற்று அத் 0600-3

திருவருள் கண்டு வாழ்ந்து சிவகாமியாரும் நின்றார் 0600-4

51. மட்டு அவிழ் அலங்கல் வென்றி மன்னவர் பெருமான் முன்னர் 0601-1
உள் தரும் களிப்பினோடும் உறங்கி மீது எழுந்தது ஒத்து 0601-2
முட்ட வெம் கடங்கள் பாய்ந்து முகில் என முழங்கிப் பொங்கும் 0601-3
பட்ட வர்த்தனத்தைக் கொண்டு பாகரும் அணைய வந்தார் 0601-4

52. ஆன சீர்த் தொண்டர் கும்பிட்டு அடியனேன் களிப்ப இந்த 0602-1
மான வெம் களிற்றில் ஏறி மகிழ்ந்து எழுந்து அருளும் என்ன 0602-2
மேன்மையப் பணி மேல் கொண்டு வணங்கி வெண் குடையின் நீழல் 0602-3
யானை மேற் கொண்டு சென்றார் இவுளி மேல் கொண்டு வந்தார் 0602-4

53. அந்நிலை எழுந்த சேனை ஆர் கலி ஏழும் ஒன்றாய் 0603-1
மன்னிய ஒலியின் ஆர்ப்ப மண் எலாம் மகிழ்ந்து வாழ்த்தப் 0603-2
பொன் நெடும் பொதுவில் ஆடல் நீடிய புனிதர் பொன் தாள் 0603-3
சென்னியில் கொண்டு சென்னி திருவளர் கோயில் புக்கான் 0603-4

54. தம்பிரான் பணிமேற் கொண்டு சிவகாமியாரும் சார 0604-1
எம்பிரான் அன்பரான எறிபத்தர் தாமும் என்னே 0604-2
அம்பலம் நிறைந்தார் தொண்டர் அறிவதற்கு அரியார் என்று 0604-3
செம்பியன் பெருமை உன்னித் திருப்பணி நோக்கிச் சென்றார் 0604-4

5.5 மற்றவர் இனையவான வன்பெரும் தொண்டு மண்மேல் 0605-1
உற்றிடத்து அடியார் முன் சென்று உதவியே நாளும் நாளும் 0605-2
நல்தவக் கொள்கை தாங்கி நலமிகு கயிலை வெற்பில் 0605-3
கொற்றவர் முன் ஆம் கோ முதல் தலைமை பெற்றார் 0605-4

56. ஆளுடைத் தொண்டர் செய்த ஆண்மையும் தம்மைக் கொல்ல 0606-1
வாளினைக் கொடுத்து நின்ற வளவனார் பெருமை தானும் 0606-2
நாளும் மற்று அவர்க்கு நல்கும் நம்பர் தாம் அளக்கில் அன்றி 0606-3
நீளும் இத் தொண்டின் நீர்மை நினைக்கில் ஆர் அளக்க வல்லார் 0606-4

57. தேன் ஆரும் தண் பூம் கொன்றைச் செம் சடையவர் பொன் தாளில் 0607-1
ஆனாத காதல் அன்பர் எறிபத்தர் அடிகள் சூடி 0607-2
வான் ஆளும் தேவர் போற்றும் மன்று உளார் நீறு போற்றும் 0607-3
ஏனாதி நாதர் செய்த திருத் தொழில் இயம்பல் உற்றேன் 0607-4

## 9 ஏனாதிநாத நாயனார் புராணம்

1. புண்டரிகம் பொன் வரை மேல் ஏற்றிப் புவி அளிக்கும் 0608-1
தண் தரள வெண் கவிகைத் தார் வளவர் சோணாட்டில் 0608-2
வண்டு அறை பூம் சோலை வயல் மருதத் தண் பணை சூழ்ந்து 0608-3
எண் திசையும் ஏறிய சீர் எயின் மூதூர் எயினன் ஊர் 0608-4

2. வேழக் கரும்பினோடு மென் கரும்பு தண் வயலில் 0609-1
தாழக் கதிர்ச்சாலி தான் ஓங்கும் தன்மை அதாய் 0609-2
வாழக் குடி தழைத்து மன்னிய அப் பொன் பதியில் 0609-3
ஈழக் குலச் சான்றார் ஏனாதி நாதனார் 0609-4

3. தொன்மைத் திரு நீற்றுத் தொண்டின் வழிபாட்டின் 0610-1
நன்மைக் கண் நின்ற நலம் என்றும் குன்றாதார் 0610-2
மன்னர்க்கு வென்றி வாள் படை பயிற்றும் 0610-3
தன்மைத் தொழில் விஞ்சையில் தலைமை சார்ந்து உள்ளார் 0610-4

4. வாளின் படை பயிற்றி வந்த வளம் எல்லாம் 0611-1
நாளும் பெரு விருப்பால் நண்ணும் கடப் பாட்டில் 0611-2
தாளும் தட முடியும் காணாதார் தம்மையும் தொண்டு 0611-3
ஆளும் பெருமான் அடித் தொண்டர்க்கு ஆக்குவார் 0611-4

5. நள்ளர்களும் போற்றும் நன்மைத் துறையின் கண் 0612-1
எள்ளாத செய்கை இயல்பின் ஒழுகு நாள் 0612-2
தள்ளாத தங்கள் தொழில் உரிமைத் தாயத்தின் 0612-3
உள்ளான் அதிசூரன் என்பான் உளன் ஆனான் 0612-4

6. மற்ற அவனும் கொற்ற வடிவாள் படைத் தொழில்கள் 0613-1
கற்றவர்கள் தன்னில் கடந்து உள்ளார் இல்லை எனும் 0613-2
பெற்றிமையான் மா நிலத்து மிக்க பெருமிதம் வந்து 0613-3
உற்று உலகில் தன்னையே சால மதித்து உள்ளான் 0613-4

7. தான் ஆள் விருத்தி கெடத் தங்கள் குலத் தாயத்தின் 0614-1
ஆனாத செய் தொழிலாம் ஆசிரியத் தன்மை வளம் 0614-2
மேன் ஆளும் குறைந்து மற்று அவர்க்கே மேம் படலால் 0614-3
ஏனாதி நாதர் திறத்து ஏலா இகல் புரிந்தான் 0614-4

8. கதிரோன் எழ மழுங்கிக் கால் சாயும் காலை 0615-1
மதி போல் அழிந்து பொறா மற்று அவனும் சுற்றப் 0615-2
பதியோர் உடன் கூடப் பண்ணி அமர் மேல் சென்று 0615-3
எதிர் போர் விளைப்பதற்கே எண்ணித் துணிந்து எழுந்தான் 0615-4

9. தோள் கொண்ட வல் ஆண்மைச் சுற்றத்தொடும் துணையாம் 0616-1
கோள் கொண்ட போர் மள்ளர் கூட்டத்தொடும் சென்று 0616-2
வாள் கொண்ட தாயம் வலியாரே கொள்வது என 0616-3
மூள்கின்ற செற்றத்தான் முன் கடையில் நின்று அழைத்தான் 0616-4

10. வெம் கண் புலி கிடந்த வெம் முழையில் சென்று அழைக்கும் 0617-1
பைம் கண் குறு நரியே போல்வான் படை கொண்டு 0617-2
பொங்கிப் புறம் சூழ்ந்து போர் குறித்து நேர் நின்றே 0617-3
அம் கண் கடை நின்று அழைத்தான் ஒலி கேளா 0617-4

1.1 ஆர் கொல் பொர அழைத்தார் என்று அரி ஏற்றின் கிளர்ந்து 0618-1
சேர்வு பெறக் கச்சில் செறிந்த உடை மேல் வீக்கி 0618-2
வார் கழலும் கட்டி வடி வாள் பல கைகொடு 0618-3
போர் முனையில் ஏனாதி நாதர் புறப்பட்டார் 0618-4

12. புறப்பட்ட போதின் கண் போர்த் தொழில்கள் கற்கும் 0619-1
விறல் பெரும் சீர்க் காளையர்கள் வேறு இடத்து நின்றார் 0619-2
மறப் படை வாள் சுற்றத்தார் கேட்டு ஓடி வந்து 0619-3
செறற்கு அரும் போர் வீரர்க்கு இரு மருங்கும் சேர்ந்தார்கள் 0619-4

13. வந்து அழைத்த மாற்றான் வயப் புலி போத்து அன்னார் முன் 0620-1
நம் தமது வாள் பயிற்று நல் தாயம் கொள்ளுங்கால் 0620-2
இந்த வெளி மேல் கை வகுத்து இருவேம் பொரு படையும் 0620-3
சந்தித்து அமர் விளைத்தால் சாயாதார் கொள்வது என் 0620-4

14. என்று பகைத்தோன் உரைப்ப ஏனாதி நாதர் அது 0621-1
நன்று உனக்கு வேண்டுமேல் நண்ணுவன் என்று உள் மகிழ்ந்து 0621-2
சென்றவன் முன் சொன்ன செருக் களத்துப் போர் குறிப்பக் 0621-3
கன்றி இரு படையும் கை வகுத்து நேர் மலைவார் 0621-4

15. மேக ஒழுங்குகள் முன் கொடு மின் நிரை தம்மிடையே கொடு 0622-1
மாக மருங்கினும் மண்ணினும் வல் உரு மேல் எதிர் செல்வன 0622-2
வாக நெடும் பல கைக்குலம் ஆள் வினை வாள் உடை ஆடவர் 0622-3
காக மிடைந்த களத்து இரு கைகளின் வந்து கலந்தனர் 0622-4

16. கால் கழல் கட்டிய மள்ளர்கள் கைகளின் மெய்கள் அடக்கிய 0623-1
வாள் ஒளி வட்ட முனைத்திட வந்து இரு கைகளின் முந்தினர் 0623-2

வேலொடு வேல் எதிர் நீள்வன் மேவிய பாதலம் விட்டு உயர் 0623-3
ஞாலம் உறும் பணி வீரர்கள் நா நிமிர்கின்றன ஒத்தன 0623-4

17. வெம் கண் விறல் சிலை வீரர்கள் வேறு இரு கையிலும் நேர்பவர் 0624-1
தங்கள் சிலைக்குலம் உந்தின தாவில் சரங்கள் நெருங்குவ 0624-2
பொங்கு சினத்து எரியில் புகை போகு கொடிக்கள் வளைத்து எதிர் 0624-3
செம் கண் விழிக் கனல் சிந்திய சீறு பொறிச் செலவு ஒத்தன 0624-4

18. வாளொடு நீள் கை துடித்தன மார்பொடு வேல்கள் குளித்தன 0625-1
தோளொடு வாளி நிலத்தன தோலொடு தோல்கள் தகைத்தன 0625-2
தாளொடு வார் கழல் இற்றன தாரொடு சூழ் சிரம் அற்றன 0625-3
நாளொடு சீறி மலைப்பவர் நாடிய போர் செய் களத்தினில் 0625-4

19. குருதியின் நதிகள் பரந்தன குறை உடல் ஓடி அலைந்தன 0626-1
பொரு படை அறு துணி சிந்தின புடை சொரி குடல் உடல் பம்பின 0626-2
வெருவர எருவை நெருங்கின வீசி அறு துடிகள் புரண்டன 0626-3
இரு படை தனினும் எதிர்ந்தவர் எதிர் எதிர் அமர் செய் பறந்தலை 0626-4

20. நீள் இடை முடுகி நடந்து எதிர் நேர் இருவரில் ஒருவன் தொடர் 0627-1
தாள் இரு தொடை அற முன் பெயர் சாரிகை முறைமை தடிந்தனன் 0627-2
வாள் ஒடு வீழும் உடல் வென்றவன் மார்பிடை அறமுன் எறிந்திட 0627-3
ஆளியின் அவனும் அறிந்தனன் ஆயினர் பலர் உளர் எங்கணும் 0627-4

21. சூர் முனை அயில் கொடு முட்டினர் கூடி முன் உருவிய தட்டுடன் 0628-1
நேர் உரம் உருவ உரப்புடன் நேர்பட எதிர் எதிர் குத்தினர் 0628-2
ஆருயிர் கழியவும் நிற்பவர் ஆண்மையில் இருவரும் ஒத்தமை 0628-3
போர் அடு படைகொடு அளப்பவர் போல்பவர் அளவிலர் பட்டனர் 0628-4

2.2 பொன் சிலை வளைய எதிர்ந்தவர் புற்று அரவு அனைய சரம்பட 0629-1
வில் படை துணியவும் நின்று இலர் வெற்றி கொன் சுரிகை வழங்கினர் 0629-2
முற்றிய பெருவளன் இன்றியும் முற்படு கொடை நிலை நின்றிட 0629-3
உற்றன உதவிய பண்பினர் ஒத்தனர் உளர் சில கண்டகர் 0629-4

23. அடல் முனை மறவர் மடிந்தவர் அலர் முகம் உயிர் உள வென்று உறு 0630-1
படர் சிறை சுலவு கருங்கொடி படர்வன சுழல்வன துன்றல் இல் 0630-2
வடு சுடர் விழிகள் இரும்பு செய் வினைஞர் தம் உலையின் முகம் பொதி 0630-3
புடை மிடை கரி இடை தங்கிய புகை விடு தழலை நிகர்த்தன 0630-4

24. திண் படை வயவர் பிணம் படு செங்களம் அதனிடை முன் சிலர் 0631-1
புண் படு வழி சொரியும் குடர் பொங்கிய கழுகு பருந்தொடு 0631-2
கொண்டு எழு பொழுதினும் முன் செயல் குன்றுதல் இலர் தலை நின்றனர் 0631-3
விண் படர் கொடி விடு பண் பயில் விஞ்சையர் குமரரை வென்றனர் 0631-4

25. இம் முனைய வெம் போரில் இரு படையின் வாள் வீரர் 0632-1
வெம் முனையில் வீடிய பின் வீடாது மிக்கு ஒழிந்த 0632-2
தம்முடைய பல் படைஞர் பின்னாகத் தாம் முன்பு 0632-3
எம் முனையில் ஏனாதி நாதர் செயிர்த்து எழுந்தார் 0632-4

26. வெஞ்சினவாள் தீ உமிழ வீரக் கழல் கலிப்ப 0633-1
நஞ்சு அணி கண்டர்க்கு அன்பர் தாம் எதிர்ந்த நாட்பின் கண் 0633-2
எஞ்சி எதிர் நின்ற இகல் முனையில் வேல் உழவர் 0633-3
தம் சிரமும் தோன் உரமும் தாள் உரமும் தாம் துணித்தார் 0633-4

27. தலைப்பட்டார் எல்லாரும் தனி வீரர் வாளில் 0634-1
கொலைப் பட்டார் முட்டாதார் கொல் களத்தை விட்டு 0634-2
நிலைப்பட்ட மெய் உணர்வு நேர் பட்ட போதில் 0634-3
அலைப்பட்ட ஆர்வமுதல் குற்றம் போல் ஆயினார் 0634-4

28. இந் நிலைய வெம் களத்தில் ஏற்று அழிந்த மானத்தால் 0635-1
தன் உடைய பல் படைஞர் மீண்டார் தமைக் கொண்டு 0635-2
மின் ஒளி வாள் வீசி விறல் வீரர் வெம் புலி யேறு 0635-3
அன்னவர் தம் முன் சென்று அதி சூரன் நேர் அடர்ந்தான் 0635-4

29. மற்றவர் தம் செய்கை வடி வாள் ஒளி காணச் 0636-1
சுற்றி வரும் வட்ட அணையில் தோன்றா வகை கலந்து 0636-2
பற்றி அடர்க்கும் பொழுதில் தானும் படை பிழைத்துப் 0636-3
பொன் தடம் தோள் வீரர்க்கு உடைந்து பிறகு இட்டான் 0636-4

30. போன அதிசூரன் போரில் அவர்க் கழிந்த 0637-1
மானம் மிக மீது ஊர மண் படுவான் கண் படான் 0637-2
ஆன செயல் ஓர் இரவும் சிந்தித்து அலமந்தே 0637-3
ஈன மிகு வஞ்சனையால் வெல்வன் என எண்ணினான் 0637-4

31. கேட்டாரும் கங்குல் புலர்காலைத் தீயோனும் 0638-1
நாட்டாரைக் கொல்லாதே நாம் இருவேம் வேறு இடத்து 0638-2
வாள் ஆயம் கொள் போர் மலைக்க வருக எனத் 0638-3
தோட்டார் பூந் தாரார்க்குச் சொல்லிச் செலவிட்டான் 0638-4

32. இவ்வாறு கேட்டலும் ஏ ஏனாதி நாதனார் 0639-1
அவ்வாறு செய்தல் அழகு இது என அமைந்து 0639-2
கை வாள் அமர் விளைக்கத் தான் கருதும் அக் களத்தில் 0639-3
வெவ் வாள் உரவோன் வருக என மேல் கொள்வார் 0639-4

3.3 சுற்றத்தார் யாரும் அறியா வகை சுடர் வாள் 0640-1
பொற் பலகையும் தாமே கொண்டு புறம் போந்து 0640-2
மற்று அவன் முன் சொல்லி வரவு குறித்தே அக் களத்தே 0640-3
பற்றலனை முன் வரவு பார்த்துத் தனி நின்றார் 0640-4

34. தீங்கு குறித்து அழைத்த தீயோன் திரு நீறு 0641-1
தாங்கிய நெற்றியினார் தங்களையே எவ்விடத்தும் 0641-2
ஆங்கு அவரும் தீங்கு இழையார் என்பது அறிந்தான் ஆய்ப் 0641-3
பாங்கில் திரு நீறு பண்டு பயிலாதான் 0641-4

35. வெண் நீறு நெற்றி விரவப் புறம் பூசி 0642-1
உள் நெஞ்சில் வஞ்சக் கறுப்பும் உடன் கொண்டு 0642-2
வண்ணச் சுடர் வாள் மணிப் பலகை கைக் கொண்டு 0642-3
புண்ணீயப் போர் வீரர்க்குச் சொன்ன இடம் புகுந்தான் 0642-4

36. வென்றி மடங்கல் விடக்கு வர முன் பார்த்து 0643-1
நின்றாற் போல் நின்ற நிலை கண்டு தன் நெற்றி 0643-2
சென்று கிடப்பு அளவும் திண் பலகையான் மறைத்தே 0643-3
முன் தன் வீரர்க்கு எதிரே மூண்டான் மறம் பூண்டான் 0643-4

37. அடல் விடை ஏறு என்ன அடத்தவனைக் கொல்லும் 0644-1
இடை தெரிந்து தாள் பெயர்க்கும் ஏனாதி நாதர் 0644-2
புடை பெயர்ந்த மாற்றான் பலகை புறம் போக்கக் 0644-3
கடையவன் தன் நெற்றியின் மேல் வெண் நீறு தாம் கண்டார் 0644-4

38. கண்ட பொழுதே கெட்டேன் முன்பு இவர் மேல் காணாத 0645-1
வெண் திரு நீற்றின் பொலிவு மேல் கண்டேன் வேறு இனி என் 0645-2
அண்டர் பிரான் சீர் அடியார் ஆயினார் என்று மனம் 0645-3
கொண்டு இவர் தம் கொள்கைக் குறி வழி நிற்பேன் என்று 0645-4

39. கை வாளுடன் பலகை நீக்கக் கருதியது 0646-1
செய்யார் நிர் ஆயுதரைக் கொன்றார் எனும் தீமை 0646-2
எய்தாமை வேண்டும் இவர்க்கு என்று இரும் பலகை 0646-3

நெய் வாளுடன் அடர்த்து நேர்வார் போல் நின்றார் 0646-4

40. அந்நின்ற தொண்டர் திரு உள்ளம் ஆர் அறிவார் 0647-1
முன் நின்ற பாதகனும் தன் கருத்தே முற்று வித்தான் 0647-2
இந் நின்ற தன்மை அறிவார் அவர்க்கு அருள 0647-3
மின் நின்ற செம் சடையார் தாமே வெளி நின்றார் 0647-4

41. மற்று இனி நாம் போற்றுவது என் வானோர் பிரான் அருளைப் 0648-1
பற்று அலர் தம் கை வாளால் பாசம் அறுத்து அருளி 0648-2
உற்றவரை என்றும் உடன் பிரியா அன்பு அருளிப் 0648-3
பொன் தொடியாள் பாகனார் பொன் அம்பலம் அணைந்தார் 0648-4

42. தம் பெருமான் சாத்தும் திரு நீற்றுச் சார்பு உடைய 0649-1
எம் பெருமான் ஏனாதி நாதர் கழல் இறைஞ்சி 0649-2
உம்பர் பிரான் காளத்தி உத்தமர்க்குக் கண் அப்பும் 0649-3
நம் பெருமான் செய்த பணி நாம் தெரிந்தவாறு உரைப்பாம் 0649-4

## 10 கண்ணப்ப நாயனார் புராணம்

1. மேலவர் புரங்கள் செற்ற விடையவர் வேத வாய்மைக் 0650-1
காவலர் திருக் காளத்திக் கண்ணப்பர் திரு நாடு என்பர் 0650-2
நாவலர் புகழ்ந்து போற்றும் நல் வளம் பெருகி நின்ற 0650-3
பூ வலர் வாவி சோலை சூழ்ந்த பொத்தப்பி நாடு 0650-4

2. இத் திரு நாடு தன்னில் இவர் திருப்பதி யாது என்னில் 0651-1
நித்தில அருவிச் சாரல் நீள் வரை சூழ்ந்த பாங்கர் 0651-2
மத்த வெம் களிற்றுக் கோட்டு வன் தொடர் வேலி கோலி 0651-3
ஒத்த பேர் அரணம் சூழ்ந்த முது பதி உடுப்பூர் ஆகும் 0651-4

3. குன்றவர் அதனில் வாழ்வார் கொடும் செவி ஞமலி யார்த்த 0652-1
வன் திரன் வளவின் கோட்டு வார் சிலை மருங்கு தூங்கப் 0652-2
பன்றியும் புலியும் எண்கும் கடமையும் மானின் பார்வை 0652-3
அன்றியும் பாறை முன்றில் ஐவனம் உணங்கும் எங்கும் 0652-4

4. வன் புலிக் குருளையோடும் வயக் கரி கன்றினோடும் 0653-1
புன் தலைச் சிறு மகார்கள் புரிந்து உடன் ஆடல் அன்றி 0653-2
அன்பு உறு காதல் கூற அணையும் மான் பிணைகள் ஓடும் 0653-3
இன்பு உற மருவி ஆடும் எயிற்றியர் மகளிர் எங்கும் 0653-4

5. வெல் படைத் தறுகண் வெம் சொல் வேட்டுவர் கூட்டம் தோறும் 0654-1
கொல் எறி குத்து என்று ஆர்த்துக் குழுமிய ஓசை அன்றிச் 0654-2
சில்லரித் துடியும் கொம்பும் சிறு கண் ஆகுளியும் கூடி 0654-3
கல் எனும் ஒலியின் மேலும் கறங்கு இசை அருவி எங்கும் 0654-4

6. ஆறு அலைத்து உண்ணும் வேடர் அயல் புலம் கவர்ந்து கொண்ட 0655-1
வேறு பல் உருவின் மிக்கு விரவும் ஆன் நிரைகள் அன்றி 0655-2
ஏறு உடை வானம் தன்னில் இடிக் குரல் எழிலி யோடு 0655-3
மாறு கொள் முழக்கம் காட்டும் மதக் கை மா நிரைகள் எங்கும் 0655-4

7. மைச் செறிந்தது அனைய மேனி வன் தொழில் மறவர் தம்பால் 0656-1
அச்சமும் அருளும் என்றும் அடைவிலார் உடை வன் தோலார் 0656-2
பொச்சை யின் நறவும் ஊனின் புழுக்கலும் உணவு கொள்ளும் 0656-3
நச்சு அழல் பகழி வேடர்க்கு அதிபதி நாகன் என்பான் 0656-4

8. பெற்றியால் தவம் முன் செய்தான் ஆயினும் பிறப்பின் சார்பால் 0657-1
குற்றமே குணமா வாழ்வான் கொடுமையே தலை நின்றுள்ளான் 0657-2
வில் தொழில் விறலின் மிக்கான் வெம் சின மடங்கல் போல்வான் 0657-3
மற்று அவன் குறிச்சி வாழ்க்கை மனைவியும் தத்தை என்பாள் 0657-4

9. அரும் பெறல் மறவர் தாயத்தான் ஆன்ற தொல் குடியில் வந்தான் 0658-1
இரும் புலி எயிற்றுத் தாலி இடை இடை மனவும் கோத்துப் 0658-2
பெரும் புறம் அலையப் பூண்டான் பீலியும் குழையும் தட்டச் 0658-3
சுரும்பு உறு படலை முச்சிச் சூர் அரிப் பிணவு போல்வான் 0658-4

10. பொருவரும் சிறப்பின் மிக்கார் இவர்க்கு இனிப் புதல்வர் பேறே 0659-1
அரியது என்று எவரும் கூற அதற்பட காதலால் ஏ 0659-2
முருகு அலர் அலங்கல் செவ்வேள் முருகவேள் முன்றில் சென்று 0659-3
பரவுதல் செய்து நாளும் பராய்க் கடன் நெறியில் நிற்பார் 0659-4

1.1 வாரணச் சேவலோடும் வரி மயில் குலங்கள் விட்டுத் 0660-1
தோரண மணிகள் தூக்கிச் சுரும்பு அணி கதம்பம் நாற்றிப் 0660-2
போரணி நெடு வேலோற்குப் புகழ்புரி குரவை தூங்கப் 0660-3
பேர் அணங்கு ஆடல் செய்து பெருவிழா எடுத்த பின்றை 0660-4

12. பயில் வடுப் பொலிந்த யாக்கை வேடர்தம் பதியாம் நாகற்கு 0661-1
எயில் உடைப் புரங்கள் செற்ற எந்தையார் மைந்தர் ஆன 0661-2
மயில் உடைக் கொற்ற ஊர்தி வரை உரங் கிழித்த திண்மை 0661-3
அயில் உடைத் தடக்கை வென்றி அண்ணலார் அருளினாலே 0661-4

13. கானவர் குலம் விளங்கத் தத்தைபால் கருப்பம் நீட 0662-1
ஊனம் இல் பலிகள் போக்கி உறு கடன் வெறி ஆட்டோடும் 0662-2
ஆன அத் திங்கள் செல்ல அளவு இல் செய் தவத்தினாலே 0662-3
பால் மதி உவரி ஈன்றால் என மகப் பயந்த போது 0662-4

14. கரிப் பரு மருப்பின் முத்தும் கழை விளை செழுநீர் முத்தும் 0663-1
பொருப்பின் மணியும் வேடர் பொழி தரு மழையே அன்றி 0663-2
வரிச் சுரும்பு அலைய வானின் மலர் மழை பொழிந்தது எங்கும் 0663-3
அரிக் குறும் துடியே அன்றி அமரர் துந்துபியும் ஆர்த்த 0663-4

15. அருவரைக் குறவர் தங்கள் அகன் குடிச் சீறூர் ஆயம் 0664-1
பெரு விழா எடுத்து மிக்க பெரும் களி கூறும் காலைக் 0664-2
கரு வரை காள மேகம் ஏந்தியது என்னத் தாதை 0664-3
பொரு வரைத் தோள்கள் ஆரப் புதல்வனை எடுத்துக் கொண்டான் 0664-4

16. கருங் கதிர் விரிக்கும் மேனி காமரு குழவி தானும் 0665-1
இரும்புலி பறழின் ஓங்கி இதவுளர் அளவே அன்றி 0665-2
அரும் பெறல் உலகமெல்லாம் அளப்பரும் பெருமை காட்டித் 0665-3
தருங்குறி பலவும் சாற்றும் தன்மையில் பொலிந்து தோன்ற 0665-4

17. அண்ணலைக் கையில் ஏந்தற்கு அருமையால் உரிமைப் பேரும் 0666-1
திண்ணன் என்று இயம்பும் என்னத் திண்சிலை வேடர் ஆர்த்தார் 0666-2
புண்ணியப் பொருளாய் உள்ள பொருவில் சீர் உருவினானைக் 0666-3
கண்ணினுக்கு அணியாத் தங்கள் கலன்பல அணிந்தார் அன்றே 0666-4

18. வரை உறை கடவுட் காப்பு மறகுடி மரபில் தங்கள் 0667-1
புரையில் தொல் முறைமைக்கு ஏற்பப் பொருந்துவ போற்றிச் செய்து 0667-2
விரை இளம் தளிரும் சூட்டி வேம்பு இழைத்து இடையே கோத்த 0667-3
அரை மணிக் கவடி கட்டி அழகு உற வளர்க்கும் நாளில் 0667-4

19. வருமுறைப் பருவம் தோறும் வளமிகு சிறப்பில் தெய்வப் 0668-1
பெருமடை கொடுத்துத் தொக்க பெருவிறல் வேடர்கள் எல்லாம் 0668-2
திருமலி துழனி பொங்கச் செழுங்களி மகிழ்ச்சி செய்தே 0668-3
அருமையில் புதல்வர் பெற்ற ஆர்வமும் தோன்ற உய்த்தார் 0668-4

20. ஆண்டு எதிர் அணைந்து செல்ல விடும் அடித் தளர்வு நீங்கிப் 0669-1
பூண் திகழ் சிறு புன் குஞ்சிப் புலி உகிர்ச் சுட்டி சாத்தி 0669-2

மூண்டு எழு சினத்துச் செங்கண் முளவு முள் அரிந்து கோத்த 0669-3
நாண்டரும் எயிற்றுத் தாலி நலம் கிளர் மார்பில் தூங்க 0669-4

21. பாசொளி மணியோடு ஆர்த்த பன் மணிச் சதங்கை ஏங்க 0670-1
காசொடு தொடுத்த காப்புக் கலன் புனை அரைஞாண் சேர்த்தித் 0670-2
தேசு உடை மருப்பில் தண்டை செறிமணிக் குதம்பை மின்ன 0670-3
மாசு அறு கோலம் காட்டி மறுகு இடை ஆடும் நாளில் 0670-4

2.2 தண் மலர் அலங்கல் தாதை தாய் மனம் களிப்ப வந்து 0671-1
புண்ணிய கங்கை நீரில் புனிதமாம் திருவாய் நீரில் 0671-2
உள் நனைந்து அமுதம் ஊரி ஒழுகிய மழலைத் தீம் சொல் 0671-3
வண்ண மென் பவளச் செவ்வாய் குதட்டியே வளரா நின்றார் 0671-4

23. பொரு புலிப் பார்வைப் பேழ்வாய் முழை எனப் பொன் கை நீட்டப் 0672-1
பரிஉடைத் தந்தை கண்டு பைந்தழை கைக் கொண்டு ஓச்ச 0672-2
இரு சுடர்க் குறு கண் தீர்க்கும் எழில் வளர் கண்ணீர் மல்கி 0672-3
வருதுளி முத்தம் அத்தாய் வாய் முத்தம் கொள்ள மாற்றி 0672-4

24. துடிக் குறடு உருட்டி ஓடித் தொடக்கு நாய்ப் பாசம் சுற்றிப் 0673-1
பிடித்து அறுத்து எயினப் பிள்ளைப் பேதையர் இழைத்த வண்டல் 0673-2
அடிச் சிறு தளிரால் சிந்தி அருகு உறு சிறுவரோடும் 0673-3
குடிச் செறு குரம்பை எங்கும் குறு நடை குறும்பு செய்து 0673-4

25. அனையன பலவும் செய்தே ஐந்தின் மேல் ஆன ஆண்டின் 0674-1
வனை தரு வடிவார் கண்ணி மறச் சிறு மைந்த ரோடும் 0674-2
சினை மலர்க் காவுகள் ஆடி செறிகுடிக் குறிச்சி சூழ்ந்த 0674-3
புனை மருப் புழலை வேலிப் புறச்சிறு கானில் போகி 0674-4

26. கடு முயல் பறழினோடுங் கான ஏனத்தின் குட்டி 0675-1
கொடு வரிக் குருளை செந்நாய் கொடும் செவிச் சாபம் ஆன 0675-2
முடுகிய விசையில் ஓடித் தொடர்ந்து உடன் பற்றி முற்றத்து 0675-3
இடு மரத் திரளில் கட்டி வளப்பன எண் இலாத 0675-4

27. அலர் பகல் கழிந்த அந்தி ஐயவிப் புகையும் ஆட்டிக் 0676-1
குல முது குறத்தி ஊட்டிக் கொண்டு கண் துயிற்றிக் கங்குல் 0676-2
புலர ஊன் உணவு நல்கிப் புரி விளையாட்டின் விட்டுச் 0676-3
சில முறை ஆண்டு செல்ல சிலை பயில் பருவம் சேர்ந்தார் 0676-4

28. தந்தையும் மைந்தனாரை நோக்கித் தன் தடித்த தோளால் 0677-1
சிந்தை உள் மகிழப் புல்லிச் சிலைத் தொழில் பயிற்ற வேண்டி 0677-2
முந்தை அத் துறையில் மிக்க முதியரை அழைத்துக் கூட்டி 0677-3
வந்த நாள் குறித்தது எல்லாம் மறவர்க்குச் சொல்லி விட்டான் 0677-4

29. வேடர் தம் கோமான் நாதன் வென்றி வேள் அருளால் பெற்ற 0678-1
சேடரின் மிக்க செய்கைத் திண்ணன் வில் பிடிக்கின்றான் என்று 0678-2
ஆடியல் துடியும் சாற்றி அறைந்த பேர் ஓசை கேட்டு 0678-3
மாடு உயர் மலைகள் ஆளும் மறக் குலத் தலைவர் எல்லாம் 0678-4

30. மலை படு மணியும் பொன்னும் தரளமும் வரியின் தோலும் 0679-1
கொலை புரி களிற்றுக் கோடும் பீலியின் குவையும் தேனும் 0679-2
தொலைவில் பல் நறவும் ஊனும் பலங்களும் கிழங்கும் துன்றச் 0679-3
சிலை பயில் வேடர் கொண்டு திசை தொறும் நெருங்க வந்தார் 0679-4

31. மல்கிய வளங்கள் எல்லாம் நிறைந்திட மாறுஇல் சீறூர் 0680-1
எல்லையில் அடங்கா வண்ணம் ஈண்டினர் கொணர்ந்தா எங்கும் 0680-2
பல் பெரும் கிளைஞர் போற்றப் பராய்க் கடன் பலவும் செய்து 0680-3
வில் விழா எடுக்க என்று விளம்பினான் வேடர் கோமன் 0680-4

32. பான்மையில் சமைத்துக் கொண்டு படைக்கலம் வினைஞர் ஏந்த 0681-1
தேன் அலர் கொன்றையார் தம் திருச்சிலைச் செம்பொன் மேரு 0681-2
வானது கடலின் நஞ்சும் ஆக்கிட அவர்க்கே பின்னும் 0681-3
கான ஊன் அமுதம் ஆக்கும் சிலையினைக் காப்புச் செய்தார் 0681-4

3.3 சிலையினைக் காப்புக் கட்டும் திண் புலி நரம்பில் செய்த 0682-1
நல மிகு காப்பு நல் நாண் நாகனார் பயந்த நாகர் 0682-2
குலம் விளங்கு கரிய குன்றின் கோலம் முன்கையில் சேர்த்தி 0682-3
மலை உறை மாக்கள் எல்லாம் வாழ்த்து எடுத்து இயம்பினார்கள் 0682-4

34. ஐவன அடிசில் வெவ்வேறு அமைந்தன புற்பாற் சொன்றி 0683-1
மெய் வரைத் தினை மென் சோறு மூங்கில் வன் பதங்கள் மற்றும் 0683-2
கைவினை எயினர் ஆக்கிக் கலந்த ஊன் கிழங்கு துன்றச் 0683-3
செய் வரை உய்ப்ப எங்கும் கலந்தனர் சினவில் வேடர் 0683-4

35. செம் தினை இடியும் தேனும் அருந்துவார் தேனில் தோய்த்து 0684-1
வெந்த ஊன் அயில்வார் வேரி விளங்கனி கவளம் கொள்வார் 0684-2
நந்திய ஈயல் உண்டி நசையொடு மிசைவார் வேறு வேறு 0684-3
அந்தம் இல் உணவின் மேலோர் ஆயினர் அளவு இலார்கள் 0684-4

36. அயல் வரைப் புலத்தின் வந்தார் அருங்குடி இருப்பில் உள்ளார் 0685-1
இயல் வகை உணவில் ஆர்ந்த எயிற்றியர் எயினர் எல்லாம் 0685-2
உயர் கதிர் உச்சி நீங்க ஒலிவில் பல் நறவு மாந்தி 0685-3
மயல் உறு களிப்பின் நீடி வரி சிலை விழவு கொள்வார் 0685-4

37. பாசிலைப் படலைச் சுற்றிப் பன் மலர்த் தொடையல் சூடிக் 0686-1
காசு உடை வடத் தோல் கட்டி கவடி மெய்க் கலன்கள் பூண்டார் 0686-2
மாசில் சீர் வெட்சி முன்னா வருதுறைக் கண்ணி சூடி 0686-3
ஆசு இல் ஆசிரியன் ஏந்தும் அடல் சிலை விழவு கொள்வார் 0686-4

38. தொண்டக முரசும் கொம்பும் துடிகளும் துளை கொள் வேயும் 0687-1
எண் திசை நிறைந்து விம்ம எழுந்த பேர் ஒலியினோடும் 0687-2
திண்திறல் மறவர் ஆர்ப்புச் சேண் விசும்பு இடித்துச் செல்லக் 0687-3
கொண்ட சீர் விழவு பொங்கக் குறிச்சியை வலம் கொண்டார்கள் 0687-4

39. குன்றவர் களி கொண்டாடக் கொடிச்சியர் துணங்கை ஆட 0688-1
துன்றிய மகிழ்ச்சியோடும் சூர் அரமகளிர் ஆட 0688-2
வென்றி வில் விழவினோடும் விருப்புடை ஏழாம் நாளாம் 0688-3
அன்று இரு மடங்கு செய்கை அழகு உற அமைத்த பின்னர் 0688-4

40. வெம் கதிர் விசும்பின் உச்சி மேவிய பொழுதில் எங்கும் 0689-1
மங்கல வாழ்த்து மல்க மருங்கு பல்லியங்கள் ஆர்ப்பத் 0689-2
தங்கள் தொல் மரபின் விஞ்சைத் தனுத் தொழில் வலவர் தம்பால் 0689-3
பொங்கு ஒளிக் கரும் போர் ஏற்றைப் பொருசிலை பிடிப்பித்தார்கள் 0689-4

41. பொன் தட வரையின் பாங்கர்ப் பரிவு உறு கடன் முன் செய்த 0690-1
வில் தொழில் களத்தில் நண்ணி விதிமுறை வணங்கி மேவும் 0690-2
அற்றை நாள் தொடங்கி நாளும் அடல் சிலை ஆண்மை முற்றக் 0690-3
கற்றனர் என்னை ஆளும் கானவர்க்கு அரிய சிங்கம் 0690-4

42. வண்ண வெம் சிலையும் மற்றப் படைகளும் மலரக் கற்று 0691-1
கண் அகல் சாயல் பொங்கக் கலை வளர் திங்களே போல் 0691-2
எண் இரண்டு ஆண்டின் செவ்வி எய்தினார் எல்லை இல்லாப் 0691-3
புண்ணியம் தோன்றி மேல் மேல் வளர் அதன் பொலிவு போல்வார் 0691-4

43. இவ் வண்ணம் திண்ணனார் நிரம்பு நாளில் இருங் குறவர் பெரும் குறிச்சிக்கு இறைவன் ஆய
0692-1

மை வண்ண வரை நெடும் தோள் நாகன் தானும் மலை எங்கும் வனம் எங்கும் வரம்பில் காலம்
0692-2
கை வண்ணச் சிலை வேட்டை ஆடித் தெவ்வர் கண நிரைகள் பல கவர்ந்து கானம் காத்து
0692-3
மெய் வண்ணம் தளர் மூப்பின் பருவம் எய்தி வில் உழவின் பெரு முயற்சி மெலிவன் ஆனான்
0692-4

4.4 அம் கண் மலைத் தடம் சாரல் புனங்கள் எங்கும் அடல் ஏனம் புலி கரடி கடமை ஆமா
0693-1
வெம் கண் மரை கலையொடு மான் முதலாய் உள்ள மிருகங்கள் மிக நெருங்கி மீது ஊ காலைத்
0693-2
திங்கள் முறை வேட்டை வினை தாழ்ந்தது என்று சிலை வேடர் தாம் எல்லாம் திரண்டு சென்று
0693-3
தங்கள் குல முதல் தலைவன் ஆகி உள்ள தண் தெரியல் நாகன் பால் சார்ந்து சொன்னார்
0693-4

45. சொன்ன உரை கேட்டலுமே நாகன் தானும் சூழ்ந்து வரும் தன் மூப்பின் தொடர்வு நோக்கி
0694-1
முன் அவர்கட்கு உரை செய்வான் மூப்பினாலே முன்பு போல் வேட்டையினில் முயல கில்லேன்
0694-2
என் மகனை உங்களுக்கு நாதன் ஆக எல்லீரும் கைக் கொள் மின் என்ற போதின்
0694-3
அன்னவரும் இரங்கிப் பின் மகிழ்ந்து தம் கோன் அடி வணங்கி இம் மாற்றம் அரைகின்றார்கள்
0694-4

46. இத்தனை காலமும் நினது சிலைக் கீழ் தங்கி இனிது உண்டு தீங்கு இன்றி இருந்தோம்
இன்னும் 0695-1
அத்த நினத்து அருள் வழியே நிற்பது அல்லால் அடுத்த நெறி வேறு உளதோ அதுவே அன்றி
0695-2
மெய்த்த விறல் திண்ணனை உன் மரபில் சால மேம் படவே பெற்று அளித்தாய் விளங்கு மேன்மை
0695-3
வைத்த சிலை மைந்தனை ஈண்டு அழைத்து நுங்கவரை ஆட்சி அருள் என்று மகிழ்ந்து வேடர்
0695-4

47. சிலை மறவர் உரை செய்ய நாகன் தானும் திண்ணனை முன் கொண்டுவரச் செப்பி விட்டு
0696-1
மலை மருவு நெடும் கானில் கன்னி வேட்டை மகன் போகக் காடு பலி மகிழ்வு ஊட்ட
0696-2
தலை மரபின் வழி வந்த தேவர் ஆட்டிதனை அழைமின் என அங்குச் சார்ந்தோர் சென்று
0696-3
நிலைமை அவள் தனக்கு உரைப்ப நரை மூதாட்டி நெடிது வந்து விருப்பின் ஓடும் கடிது வந்தாள்
0696-4

48. கானில் வரித்தளிர் துதைந்த கண்ணி சூடிக் கலை மருப்பின் அரிந்த குழை காதில் பெய்து
0697-1

மானின் வயிற்று அரிதாரத் திலகம் இட்டு மயில் கழுத்து மனவு மணி வடமும் பூண்டு
0697-2
தான் இழிந்து இரங்கி முலை சரிந்து தாழத் தாழைப்பீலி மரவுரி மேல் சார எய்திப்
0697-3
பூ நெருங்கு தோரை மலி சேடை நல்கிப் போர் வேடர் கோமானைப் போற்றி நின்றாள்
0697-4

49. நின்ற முதுகுறக்கோலப் படிமத்தாளை நேர் நோக்கி அன்னை நீ நிரப்பு நீங்கி
0698-1
நன்று இனிதின் இருந்தனையோ என்று கூறும் நாகன் எதிர் நலம் பெருக வாழ்த்தி நல்ல
0698-2
மென் தசையும் ஈயல் ஒரு நறவும் வெற்பில் விளை வளனும் வேண்டிற்று எல்லாம்
0698-3
அன்று நீ வைத்தபடி பெற்று வாழ்வேன் அழைத்த பணி என் என்றாள் அணங்கு சார்ந்தாள்
0698-4

50. கோட்டம் இல் என் குல மைந்தன் திண்ணன் எங்கள் குலத் தலைமை யான் கொடுப்பக் கொண்டு பூண்டு 0699-1
பூட்டு உறு வெம் சிலை வேடர் தம்மைக் காக்கும் பொருப்பு உரிமை புகுகின்றான் அவனுக்கு
என்றும் 0699-2
வேட்டை வினை எனக்கு மேலாக வாய்த்து வேறு புலம் கவர் வென்றி மேவு மாறு
0699-3
காட்டில் உறை தெய்வங்கள் விரும்பி உண்ணக் காடு பலி ஊட்டு என்றான் கவலை இல்லான்
0699-4

51. மற்று அவன்தன் மொழி கேட்ட வரைச் சூர் ஆட்டி மனம் மகிழ்ந்து இங்கு அன்போடு வருகின்றேனுக்கு 0700-1
எற்றையினும் குறிகள் மிக நல்ல ஆன இதனாலே உன் மைந்தன் திண்ணன் ஆன வெற்றி வரிச்
0700-2
சிலையோன் நின் அளவில் அன்றி மேம்படுகின்றான் என்று விரும்பி வாழ்த்திக்
0700-3
கொற்றவன் தெய்வங்கள் மகிழ ஊட்ட வேண்டுவ குறைவின்றிக் கொண்டு போனாள்
0700-4

52. தெய்வம் நிகழ் குற முதியாள் சென்ற பின்பு திண்ணனார் சிலைத் தாதை அழைப்பச் சீர் கொள் 0701-1
மை விரவு நறும் குஞ்சி வாசக் கண்ணி மணி மலை ஒன்று வந்தது என்னக் 0701-2
கை விரவு சிலை வேடர் போற்ற வந்து காதல் புரி தாதை கழல் வணங்கும் போதில்
0701-3
செய் வரை போல் புயம் இரண்டும் செறியப் புல்லிச் செழும் புலித்தோல் இருக்கையின் முன் சேர வைத்தான் 0701-4

53. முன் இருந்த மைந்தன் முகம் நோக்கி நாகன் மூப்பு எனை வந்து அடைந்தலினால் முன்பு
போல 0702-1
என்னுடைய முயற்சியினால் வேட்டை ஆட இனி எனக்குக் கருத்து இல்லை எனக்கு மேலாய்
0702-2
மன்னு சிலை மலையர் குலக் காவல் பூண்டு மாறு எறிந்து மா வேட்டை ஆடி என்றும்
0702-3
உன்னுடைய மரபு உரிமை தாங்குவாய் என் உடைய தோலும் சுரிகையும் கைக் கொடுத்தான்
அன்றே 0702-4

54. தந்தை நிலை உள்கொண்டு தளர்வு கொண்டு தங்கள் குலத் தலைமைக்குச் சார்வு தோன்ற 0703-1
வந்த குறைபாடு அதனை நிரப்புமாறு மனம் கொண்ட குறிப்பினால் மருமை கொண்டு 0703-2
முந்தையவன் கழல் வணங்கி முறைமை தந்த முதல் சுரிகை உடை தோலும் வாங்கிக் கொண்டு 0703-3
சிந்தை பரம் கொள நின்ற திண்ணனார்க்குத் திருத் தாதை முகம் மலர்ந்து செப்புகின்றான் 0703-4

5.5 நம் உடைய குல மறவர் சுற்றத்தாரை நான் கொண்டு பரித்து அதன் மேல் நலமே செய்து 0704-1
தெம் முனையில் அயல் புலங்கள் கவர்ந்து கொண்ட திண் சிலையின் வளம் ஒழியாச் சிறப்பின் வாழ்வாய் 0704-2
வெம் முனையின் வேட்டைகளும் உனக்கு வாய்க்கும் விரைந்து நீ தாழாதே வேட்டை ஆட 0704-3
இம் முரண் வெம் சிலை வேடர் தங்களோடும் எழுக என விடை கொடுத்தான் இயல்பில் நின்றான் 0704-4

56. செம் கண் வயக் கோள் அரி ஏறு அன்ன திண்மை திண்ணனார் செய் தவத்தின் பெருமை பெற்ற 0705-1
வெம் கண் விறல் தாதை கழல் வணங்கி நின்று விடை கொண்டு புறம் போந்து வேடரோடும் 0705-2
மங்கல நீர்ச் சுனை படிந்து மனையின் வைகி வை இருளின் புலர் காலை வரி வில் சாலைப் 0705-3
பொங்கு சிலை அடல் வேட்டைக் கோலம் கொள்ளப் புனை தொழில் கை வினைஞரோடும் பொலிந்து புக்கார் 0705-4

57. நெறி கொண்ட குஞ்சிச் சுருள் துஞ்சி நிமிர்ந்து பொங்க 0706-1
முறி கொண்ட கண்ணிக்கு இடை மொய் ஒளிப் பீலி சேர்த்தி 0706-2
வெறி கொண்ட முல்லைப் பிணைமீது குறிஞ்சி வெட்சி 0706-3
செறி கொண்ட வண்டின் குலம் சீர் கொளப் பின்பு செய்து 0706-4

58. முன் நெற்றியின் மீது முருந்து இடை வைத்த குன்றி 0707-1
தன்னில் புரி கொண்ட மயிர் கயிர் ஆரச் சாத்தி 0707-2
மின்னல் திகழ் சங்கு விளங்கு வெண் தோடு காதின் 0707-3
மன்னிப் புடை நின்றன மா மதி போல வைக 0707-4

59. கண்டத்து இடை வெண் கவடிக் கதிர் மாலை சேர 0708-1
கொண்டக் கொடு பல் மணி கோத்து இடை ஏனக் கோடு 0708-2
துண்டப் பிறை போல்வன தூங்கிட வேங்கை வன்தோல் 0708-3
தண்டைச் செயல் பொங்கிய சன்ன வீரம் தயங்க 0708-4

60. மார்பில் சிறு தந்த மணித்திரள் மாலைத் தாழத் 0709-1
தாரில் பொலி தோள் வலயங்கள் தழைத்து மின்னச் 0709-2
சேர் வில் பொலி கங்கணம் மீது திகழ்த முன் கைக் 0709-3
கார் வில் செறி நாண் எறி கைச் செறி கட்டி கட்டி 0709-4

61. அரையில் சரணத்து உரி ஆடையின் மீது பௌவத்து 0710-1
திரையில் படு வெள் அலகு ஆர்த்து விளிம்பு சேர்த்தி 0710-2
நிரையில் பொலி நீள் உடை தோல் சுரிகைப் புறம் சூழ் 0710-3
விரையில் துவர் வார் விசி போக்கி அமைத்து வீக்கி 0710-4

62. வீரக் கழல் காலின் விளங்க அணிந்து பாதம் 0711-1
சேரத் தொடு நீடு செருப்பு விருப்பு வாய்ப்பப் 0711-2

பாரப் பெரு வில் வலம் கொண்டு பணிந்து திண்ணன் 0711-3
சாரத் திருத்தாள் மடித்து ஏற்றி வியந்து தாங்கி 0711-4

63. அங்கு அப்பொழுதில் புவனத்து இடர் வாங்க ஓங்கித் 0712-1
துங்கப் பெரு மா மழை போன்று துண் என்று ஒலிப்ப 0712-2
வெம் கண் சின நீடு விலங்கு விலங்கி நீங்கச் 0712-3
செம் கைத் தலத்தால் தடவிச் சிறு நாண் எறிந்தார் 0712-4

64. பல் வேறு வாளி புதை பார்த்து உடன் போத ஏவி 0713-1
வில் வேடர் ஆயத் துடி மேவி ஒலிக்கும் முன்றில் 0713-2
சொல் வேறு வாழ்த்துத் திசைதோறும் துதைந்து விம்ம 0713-3
வல் ஏறு போல்வார் அடல் வாளி தெரிந்து நின்றார் 0713-4

65. மானச் சிலை வேடர் மருங்கு நெருங்கும் போதில் 0714-1
பான் நற்குல மாமலரில் படர் சோதியார் முன் 0714-2
தேனல் தசை தேறல் சருப் பொரி மற்றும் உள்ள 0714-3
கானப் பலி நேர் கடவுள் பொறையாட்டி வந்தாள் 0714-4

6.6 நின்று எங்கும் மொய்க்கும் சிலை வேடர்கள் நீங்கப் புக்குச் 0715-1
சென்று அங்கு வள்ளல் திரு நெற்றியில் சேடை சாத்தி 0715-2
உன் தந்தை தந்தைக்கும் இந் நன்மைகள் உள்ள வல்ல 0715-3
நன்று உம் பெரிது விறல் நம் அளவு அன்று இஃது என்றாள் 0715-4

67. அப் பெற்றியில் வாழ்த்தும் அணங்கு உடை ஆட்டி தன்னைச் 0716-1
செப்பற்கு அரிது ஆய சிறப்பு எதிர் செய்து போக்கிக் கைப் பற்றிய 0716-2
திண் சிலை கார் மழை மேகம் என்ன 0716-3
மெய்ப் பொன் புடை வேட்டையின் மேல் கொண்டு போந்தார் 0716-4

68. தாளில் வாழ் செருப்பர் தோல் தழைத்த நீடு தானையர் 0717-1
வாளியோடு சாபம் மேவு கையர் வெய்ய வன் கணார் 0717-2
ஆளி ஏறு போல ஏகும் அண்ணலார் முன் எண்ணிலார் 0717-3
மீளி வேடர் நீடு கூட்டம் மிக்கு மேல் எழுந்ததே 0717-4

69. வன் தொடர் பிணித்த பாசம் வன் கை மள்ளர் கொள்ளவே 0718-1
வென்றி மங்கை வேடர் வில்லின் மீது மேவு பாதமுன் 0718-2
சென்று நீளுமாறு போல்வ செய்ய நாவின் வாய வாய் 0718-3
ஒன்றோடு ஒன்று நேர் படாமல் ஓடு நாய்கள் மாடு எலாம் 0718-4

70. போர் வலைச் சிலைத் தொழில் புறத்திலே விளைப்ப அச் 0719-1
சார் வலைத் தொடக்கு அறுக்க ஏகும் ஐயர் தம் முன்னே 0719-2
கார் வலைப் படுத்த குன்று கானமா வளைக்க நீள் 0719-3
வார் வலைத் திறம் சுமந்து வந்த வெற்பர் முந்தினார் 0719-4

71. நண்ணி மா மறைக் குலங்கள் நாட என்று நீடும் அத் 0720-1
தண் நிலா அடம்பு கொன்றை தங்கு வேணியார் தமைக் 0720-2
கண்ணில் நீடு பார்வை ஒன்று கொண்டு காணும் அன்பர் முன் 0720-3
எண்ணில் பார்வை கொண்டு வேடர் எம் மருங்கும் ஏகினார் 0720-4

72. கோடு முன்பு ஒலிக்கவும் குறுங் கணா குளிக்குலம் 0721-1
மாடு சென்று இசைப்பவும் மருங்கு பம்பை கொட்டவும் 0721-2
சேடு கொண்டகை விளிச் சிறந்த ஓசை செல்லவும் 0721-3
காடு கொண்டு எழுந்த வேடு கை வளைந்து சென்றதே 0721-4

73. நெருங்கு பைம் தருக் குலங்கள் நீடு காடு கூட நேர் 0722-1
வரும் கரும் சிலைத் தடக்கை மான வேடர் சேனை தான் 0722-2
பொருந் தடம் திரைக்கடல் பரப்பு இடைப் புகும் பெரும் 0722-3
கரும் தரங்க நீள் புனல் களிந்தி கன்னி ஒத்ததே 0722-4

74. தென் திசைப் பொருப்புடன் செறிந்த கானின் மான் இனம் 0723-1
பன்றி வெம் மரைக் கணங்கள் ஆதி ஆன பல் குலம் 0723-2
துன்றி நின்ற என்று அடிச் சுவட்டின் ஒற்றர் சொல்லவே 0723-3
வன் தடக்கை வார் கொடு எம் மருங்கும் வேடர் 0723-4

75. ஓடி எறிந்து வார் ஒழுக்கி யோசனைப் பரப்பு எலாம் 0724-1
நெடிய திண் வலைத் தொடக்கு நீள் இடைப் பிணித்து நேர் 0724-2
கடி கொளப் பரந்த காடு காவல் செய்து அமைத்த பின் 0724-3
செடி தலைச் சிலைக்கை வேடர் திண்ணனார் முன் நண்ணினார் 0724-4

76. வெம் சிலை கை வீரனாரும் வேடரோடு கூடி முன் 0725-1
மஞ்சு அலைக்கும் மா மலை சரிப் புறத்து வந்த மா 0725-2
அஞ்சுவித்து அடர்க்கும் நாய்கள் அட்டமாக விட்டு நீள் 0725-3
செம் சரத்தினோடு குழல் செய்த கானுள் எய்தினர் 0725-4

7.7 வெய்ய மா எழுப்ப ஏவி வெற்பர் ஆயம் ஓடி நேர் 0726-1
எய்யும் வாளி முன் தெரிந்து கொண்டு செல்ல எங்கணும் 0726-2
மொய் குழல் துடிக் குலங்கள் பம்பை முன் சிலைத்து எழக் 0726-3
கை விளத்து அதிர்ந்து மா எழுப்பினார்கள் கான் எலாம் 0726-4

78. ஏனமோடு மான் இனங்கள் எண்கு திண் கலைக் குலம் 0727-1
கான மேதி யானை வெம் புலிக் கணங்கள் கான் மரை 0727-2
ஆன மா அநேகம் மா வெகுண்டு எழுந்து பாய முன் 0727-3
சேனை வேடர் மேல் அடர்ந்து சீறி அம்பில் நூறினார் 0727-4

79. தாள் அறுவன் இடை துணிவன தலை துமிவன கலைமா 0728-1
வாளிகள் ஒடு குடல் சொரிதர மறிவன சில மரை மா 0728-2
நீள் உடல் விடு சரம் உருவிட நிமிர்வன மிடை கட மா 0728-3
மீளி கொள் கணை படும் உடல் எழ விழுவன பல உழையே 0728-4

80. வெம் கணை படு பிடர் கிழிபட விசை உருவிய கயவாய் 0729-1
செங் கனல் விட அதனொடு கணை செறிய முன் இரு கருமா 0729-2
அங்கு எழும் சிரம் உருவிய பொழுது அடல் எயிறு உற அதனைப் 0729-3
பொங்கிய சினமொடு கவர்வன புரைவன சில புலிகள் 0729-4

81. பின் மறவர்கள் விடு பகழிகள் பிற குற வயிற்று இடை போய் 0730-1
முன் நடுமுகம் மிசை உருவிட முடுகிய விசையுடன் அக் 0730-2
கொன் முனை அடு சரம் இனம் எதிர் குறுகிய முகம் உருவத் 0730-3
தன் எதிர் எதிர் பொருவன நிகர் தலையன பல கலைகள் 0730-4

82. கரு வரை ஒரு தனு ஒடு விசை கடுகியது என முனை நேர் 0731-1
குரிசில் முன் விடும் அடுசரம் எதிர் கொலை பயில் பொழுது அவை 0731-2
பொரு கரி யொடு சின அரி இடை புரைய உடல் புகலால் 0731-3
வரும் இரவொடு பகல் அணைவன என மிடையும் அவ்வனமே 0731-4

83. நீள் இடை விசை மிசை குதிகொள நெடு முகில் தொட எழு மான் 0732-1
தாள் உறு கழல் மறவர்கள் விடு சரம் நிரை தொடர்வன தாம் 0732-2
வாள் விடுகதிர் மதி பிரிவுற வரும் என விழும் உழையைக் 0732-3
கோள் ஒடு பயில் பணி தொடர் நிலை கொள உள எதிர் பலவே 0732-4

84. கடல் விரி புனல் கொள விழுவன கரு முகில் என நிரையே 0733-1
படர்வொடு செறி தழை பொதுளிய பயில் புதல் வனம் அதன் மேல் 0733-2
அடல் உறு சரம் உடல் உற வரை அடி இடம் அலமரலால் 0733-3
மிடை கரு மரை கரடிகள் ஓடு விழுவன வன மேதி 0733-4

85. பல துறைகளின் வெருவரல் ஒடு பயில் வலை அற நுழை மா 0734-1
உலமொடு படர்வன தகை உற உறு சினமொடு கவர் நாய் 0734-2
நிலவிய இரு வினை வலை இடை நிலை சுழல் பவர் நெறி சேர் 0734-3

புலன் உறு மனன் இடை தடைசெய்த பொறிகளின் அலவு உளவே 0734-4

86. துடி அடியன மடி செவியன துறு கயம் உனி தொடரார் 0735-1
வெடி பட விரி சிறு குருளைகள் மிசை படு கொலை விரவார் 0735-2
அடி தளர் உறு கரு உடையன அணை உறு பிணை அலையார் 0735-3
கொடியன எதிர் முடுகியும் உறு கொலை புரி சிலை மறவர் 0735-4

87. இவ்வகை வரு கொலை மறவினை எதிர் நிகழ் உழி அதிரக் 0736-1
கை வரைகலும் வெரு உற இடை கான் எழுவது ஓர் ஏனம் 0736-2
பெய் கருமுகில் என இடியொடு பிதிர் கனல் விழி சிதறி 0736-3
மொய் வலைகளை அற நிமிர் முடுகிய கடு விசையில் 0736-4

8.8 போம் அது தணை அடுதிறல் ஒடு பொரு மறவர்கள் அரி ஏறு 0737-1
ஆம் அவர் தொடர்வுறும் விசையுடன் அடி வழி செலும் அளவில் 0737-2
தாம் ஒருவரும் அறிகிலவர் தனி தொடர் வழி அதன்மேல் 0737-3
ஏ முனை அடு சிலை விடலைகள் இருவர்கள் அடி பிரியார் 0737-4

89. நாடிய கழல் வயவர்கள் அவர் நாணனும் நெடு வரிவில் 0738-1
காடனும் எனும் இருவரும் மலை காவலர் ஒடு கடிதில் 0738-2
கூடினர் விடு பகழிகளொடு கொலை ஞமலிகள் வழுவி 0738-3
நீடிய சரி படர்வது தரு நீழலின் விரை கேழல் 0738-4

90. குன்றியை நிகர் முன் செற எறி கொடு விழி இடக் குரல் நீள் 0739-1
பன்றியும் அடல் வன் திறலொடு படர் நெறி நெடிது ஓடித் 0739-2
துன்றியது ஒரு குன்று அடி வரை சுலவிய நெறி குழல் 0739-3
சென்று அதன் இடை நின்றது வலிது தெருமர நிரையில் 0739-4

91. அத் தரு வளர் சுழல் இடை அடை அதன் நிலை அறிபவர் முன் 0740-1
கைத் தெரி கணையினில் அடுவது கருதலர் விசை கடுகி 0740-2
மொய்த்து எழு சுடர் விடு சுரிகை முனை பெற எதிர் உருவி 0740-3
குத்தினர் உடல் முறிபட வெறி குல மறவர்கள் தலைவர் 0740-4

92. வேடர் தம் கரிய செம்கண் வில்லியர் விசையில் குத்த 0741-1
மாடு இரு துணியாய் வீழ்ந்த வராகத்தைக் கண்டு நாணன் 0741-2
காடனே இதன் பின் இன்று காதங்கள் பல வந்து எய்த்தோம் 0741-3
ஆடவன் கொன்றான் அச்சோ என்று அடியில் தாழ்ந்தார் 0741-4

93. மற்றவர் திண்ணனார்க்கு மொழிகின்றார் வழி வந்து ஆற்ற 0742-1
உற்றது பசி வந்து எம்மை உதவிய இதனைக் காய்ச்சிச் 0742-2
சற்று நீ அருந்தி யாமும் தின்று தண்ணீர் குடித்து 0742-3
வெற்றி கொள் வேட்டைக் காடு குருகுவோம் மெல்ல என்றார் 0742-4

94. என்று அவர் கூற நோக்கித் திண்ணனார் தண்ணீர் எங்கே 0743-1
நன்றும் இவ் வனத்தில் உள்ளது என்று உரை செய்ய நாணன் 0743-2
நின்ற இப் பெரிய தேக்கின் அப்புறம் சென்றால் நீண்ட 0743-3
குன்றினுக்கு அயலே ஓடும் குளிர்ந்த பொன் முகலி என்றான் 0743-4

95. பொங்கிய சின வில் வேடன் சொனபின் போவோம் அங்கே 0744-1
இங்கு இது தன்னைக் கொண்டு போதுமின் என்று தாமும் 0744-2
அங்கு அது நோக்கிச் சென்றார் காவதம் அரையில் கண்டார் 0744-3
செம் கண் ஏறு உடையார் வைகும் திருமலைச் சாரல் சோலை 0744-4

96. நாணனே தோன்றும் குன்றில் நாணுவோம் என்ன நாணன் 0745-1
காண நீ போதின் நல்ல காட்சியே காணும் இந்தச் 0745-2
சேண் உயர் திருக் காளத்தி மலை மிசை எழுந்து செவ்வே 0745-3
கோணம் இல் குடுமித் தேவர் இருப்பர் கும்பிடலாம் என்றான் 0745-4

97. ஆவது என் இதனைக் கண்டு இங்கு அணை தொறும் என் மேல் பாரம் 0746-1

போவது ஒன்று உளது போலும் ஆசையும் பொங்கி மேல் மேல் 0746-2
மேவிய நெஞ்சும் வேறு ஓர் விருப்பு உற விரையா நிற்கும் 0746-3
தேவர் அங்கு இருப்பது எங்கே போகு என்றார் திண்ணனார் தாம் 0746-4

98. உரை செய்து விரைந்து செல்ல அவர்களும் உடனே போந்து 0747-1
கரை வளர் கழையின் முத்தும் கார் அகில் குறடும் சந்தும் 0747-2
வரை தரு மணியும் பொன்னும் வயிரமும் புளினம் தோறும் 0747-3
திரைகள் முன் திரட்டி வைத்த திரு முகலியினைச் சார்ந்தார் 0747-4

9.9 ஆங்கு அதன் கரையின் பாங்கு ஓர் அணி நிழல் கேழல் இட்டு 0748-1
வாங்கு வில் காடன் தன்னை மரக் கடை தீக் கோல் பண்ணி 0748-2
ஈங்கு நீ நெருப்புக் காண்பாய் இம்மலை ஏறிக் கண்டு 0748-3
நாங்கள் வந்து அணைவோம் என்று நாணனும் தாமும் போந்தார் 0748-4

10.0 அளி மிடை கரை சூழ் சோலை அலர்கள் கொண்டு அணைந்த ஆற்றின் 0749-1
தெளி புனல் இழிந்து சிந்தை தெளிவுறும் திண்ணனார் தாம் 0749-2
களி வரும் மகிழ்ச்சி பொங்கக் காளத்தி கண்டு கொண்டு 0749-3
குளிர் வரு நதி ஊடு ஏகிக் குலவரைச் சாரல் சேர்ந்தார் 0749-4

10.1 கதிரவன் உச்சி நண்ணக் கடவுள் மால் வரையின் உச்சி 0750-1
அதிர் தரும் ஓசை ஐந்தும் ஆர் கலி முழக்கம் காட்ட 0750-2
இது என் கொல் நாணா என்றார்க்கு இம் மலைப் பெரும் தேன் சூழ்ந்து 0750-3
மது மலர் ஈக்கள் மொய்த்து மருங்கு எழும் ஒலி கொல் என்றான் 0750-4

102. முன்பு செய் தவத்தின் ஈட்டம் முடிவிலா இன்பம் ஆன 0751-1
அன்பினை எடுத்துக் காட்ட அளவிலா ஆர்வம் பொங்கி 0751-2
மன் பெரும் காதல் கூர வள்ளலார் மலையை நோக்கி 0751-3
என்பு நெக்கு உருகி உள்ளத்து எழு பெரு வேட்கை யோடும் 0751-4

103. நாணனும் அன்பும் முன்பு நளிர் வரை ஏறத் தாமும் 0752-1
பேணு தத்துவங்கள் என்னும் பெருகு சோபானம் ஏறி 0752-2
ஆணையாம் சிவத்தைச் சாரா அணைபவர் போல ஐயர் 0752-3
நீள் நிலை மலையை ஏறி நேர் படச் செல்லும் போதில் 0752-4

104. திங்கள் சேர் சடையார் தம்மைச் சென்றவர் காணா முன்னே 0753-1
அம் கண்ணர் கருணை கூர்ந்த அருள் திரு நோக்கம் எய்தத் 0753-2
தங்கிய பவத்தின் முன்னைச் சார்பு விட்டு அகல நீங்கிப் 0753-3
பொங்கிய ஒளியின் நீழல் பொருவில் அன்பு உருவம் ஆனார் 0753-4

105. மாகம் ஆர் திருக் காளத்தி மலை எழு கொழுந்தாய் உள்ள 0754-1
ஏக நாயகரைக் கண்டார் எழுந்த பேர் உவகை அன்பின் 0754-2
வேகம் ஆனது மேல் செல்ல மிக்கது ஓர் விரைவின் ஓடும் 0754-3
மோகமாய் ஓடிச் சென்றார் தழுவினார் மோந்து நின்றார் 0754-4

106. நெடிது போது உயிர்த்து நின்று நிறைந்து எழு மயிர்க்கால் தோறும் 0755-1
வடிவெலாம் புளகம் பொங்க மலர்க் கண்ணீர் அருவி பாய 0755-2
அடியனேற்கு இவர் தாம் இங்கே அகப்பட்டார் அச்சோ என்று 0755-3
படி இலாப் பரிவு தான் ஓர் படிவமாம் பரிசு தோன்ற 0755-4

107. வெம் மறக் குலத்து வந்த வேட்டுவச் சாதியார் போல் 0756-1
கைம் மலை கரடி வேங்கை அரி திரி கானம் தன்னில் 0756-2
உம்முடன் துணையாய் உள்ளார் ஒருவரும் இன்றிக் கெட்டேன் 0756-3
இம் மலைத் தனியே நீ இங்கு இருப்பதே என்று நைந்தார் 0756-4

108. கைச்சிலை விழுந்தது ஒரார் காளையார் மீள இந்தப் 0757-1
பச்சிலையோடும் பூவும் பறித்திட்டு நீரும் வார்த்து 0757-2
மச்சு இது செய்தார் யாரோ என்றலும் மருங்கு நின்ற 0757-3
அச்சிலை நாணன் தானும் நான் இது அறிந்தேன் என்பான் 0757-4

109.  வன் திறல் உந்தை யோடு மா வேட்டை ஆடிப் பண்டு இக் 0758-1
குன்று இடை வந்தோம் ஆகக் குளிர்ந்த நீர் இவரை ஆட்டி 0758-2
ஒன்றிய இலைப் பூச்சூட்டி ஊட்டி முன்பு அறைந்த தேர் பார்ப்பான் 0758-3
அன்று இது செய்தான் இன்றும் அவன் செய்தது ஆகும் என்றான் 0758-4

110. உள் நிறைந்து எழுந்த தேனும் ஒழிவின்றி ஆரா அன்பில் 0759-1
திண்ணனார் திருக் காளத்தி நாயனார்க்கு இனிய செய்கை 0759-2
எண்ணிய இவைகொல் ஆம் என்று இது கடைப் பிடித்துக் கொண்டு அவ் 0759-3
அண்ணலைப் பிரிய மாட்டா அளவில் ஆதரவு நீட 0759-4

1.11 இவர் தமைக் கண்டேனுக்குத் தனியராய் இருந்தார் என்னே 0760-1
இவர் தமக்கு அமுது செய்ய இறைச்சியும் இடுவார் இல்லை 0760-2
இவர் தமைப் பிரிய ஒண்ணாது என்செய்கேன் இனி யான் சால 0760-3
இவர் தமக்கு இறைச்சி கொண்டு எய்தவும் வேண்டும் என்று 0760-4

112. போதுவார் மீண்டும் செல்வர் புல்லுவர் மீளப் போவர் 0761-1
காதலின் நோக்கி நிற்பர் கன்று அகல் புனிற்று ஆப் போல்வர் 0761-2
நாதனே அமுது செய்ய நல்ல மெல் இறைச்சி நானே 0761-3
கோது அறத் தெரிந்து வேறு கொண்டு இங்கு வருவேன் என்பார் 0761-4

113.  ஆர் தமர் ஆக நீர் இங்கு இருப்பது என்று அகலமாட்டேன் 0762-1
நீர் பசித்து இருக்க இங்கு நிற்கவும் இல்லேன் என்று 0762-2
சோர் தரு கண்ணீர் வாரப் போய் வரத் துணிந்தார் ஆகி 0762-3
வார் சிலை எடுத்துக் கொண்டு மலர்க் கையால் தொழுது போந்தார் 0762-4

114. முன்பு நின்று அரிதில் நீங்கி மொய் வரை இழிந்து நாணன் 0763-1
பின்பு வந்து அணைய முன்னைப் பிற துறை வேட்கை நீங்கி 0763-2
அன்பு கொண்டு உய்ப்பச் செல்லும் அவர் திரு முகலி ஆற்றின் 0763-3
பொன் புனை கரையில் ஏறிப் புது மலர்க் காவில் புக்கார் 0763-4

115. காடனும் எதிரே சென்று தொழுது தீக் கடைந்து வைத்தேன் 0764-1
கோடு உடை ஏனம் உங்கள் குறிப்படி உறுப்பை எல்லாம் 0764-2
மாடு உற நோக்கிக் கொள்ளும் மறித்து நாம் போகைக்கு இன்று 0764-3
நீட நீர் தாழ்ந்தது என்னோ என்றலும் நின்ற நாணன் 0764-4

116. அங்கு இவர் மலையில் தேவர் தம்மைக் கண்டு அணைத்துக் கொண்டு 0765-1
வங்கினைப் பற்றிப் போத வல் உடும்பு என்ன நீங்கான் 0765-2
இங்கும் அத் தேவர் தின்ன இறைச்சி கொண்டு ஏகப் போந்தான் 0765-3
நம் குலத் தலைமை விட்டான் நலப்பட்டான் தேவர்க்கு என்றான் 0765-4

117.  என் செய்தாய் திண்ணா நீ தான் என்ன மால் கொண்டாய் எங்கள் 0766-1
முன் பெரு முதலி அல்லையோ என முகத்தை நோக்கார் 0766-2
வன் பெரும் பன்றி தன்னை எரியினில் வதக்கி மிக்க 0766-3
இன்பு உறு தசைகள் வெவ்வேறு அம்பினால் ஈர்ந்து கொண்டு 0766-4

118. கோலினில் கோத்துக் காய்ச்சி கொழும் தசை பதத்தில் வேவ 0767-1
வாலிய சுவைமுன் காண்பான் வாயினில் அதுக்கிப் பார்த்துச் 0767-2
சாலவும் இனிய எல்லாம் சருகு இலை இணைத்த கல்லை 0767-3
ஏலவே கோலிக் கூட அதன் மிசை இடுவார் ஆனார் 0767-4

119. மருங்கு நின்றவர்கள் பின்னும் மயல் மிக முதிர்ந்தான் என்னே 0768-1
அரும் பெறல் இறைச்சி காய்ச்சி அதுக்கி வேறு உமிழா நின்றான் 0768-2
பெரும் பசி உடையன் ஏனும் பேச்சிலன் எமக்கும் பேறு 0768-3
தரும் பரிசு உணரான் மற்றைத் தசை புறத்து எறியா நின்றான் 0768-4

120.  தேவு மால் கொண்டான் இந்தத் திண்ணன் மற்று இதனைத் தீர்க்கல் 0769-1
ஆவது ஒன்று அறியோம் தேவராட்டியை நாகனோடு 0769-2

மேவி நாம் கொணர்ந்து தீர்க்க வேண்டும் அவ் வேட்டைக் கானில் 0769-3
ஏவல் ஆட்களையும் கொண்டு போதும் என்று எண்ணிப் போனார் 0769-4

12.1 கானவர் போனது ஓரார் கடிதினில் கல்லையின் கண் 0770-1
ஊன் அமுது அமைத்துக் கொண்டு மஞ்சனம் ஆட்ட உன்னி 0770-2
மா நதி நன்னீர் தூய வாயினில் கொண்டு கொய்த 0770-3
தூ நறும் பள்ளித் தாமம் குஞ்சி மேல் துதையக் கொண்டார் 0770-4

12.2 தனு ஒரு கையில் வெய்ய சரத்துடன் தாங்கிக் கல்லைப் 0771-1
புனித மெல் இறைச்சி நல்ல போனகம் ஒரு கை ஏந்தி 0771-2
இனிய எம்பிரானார் சாலப் பசிப்பர் என்று இரங்கி ஏங்கி 0771-3
நனி விரைந்து இறைவர் வெற்பை நண்ணினார் திண்ணனார்தாம் 0771-4

123. இளைத்தனர் நாயனார் என்று ஈண்டச் சென்று எய்தி வெற்பின் 0772-1
முளைத்து எழு முதலைக் கண்டு முடிமிசை மலரைக் காலில் 0772-2
வளைந்த பொன் செருப்பால் மாற்றி வாயின் மஞ்சன நீர் தன்னை 0772-3
விளைத்த அன்பு உமிழ்வார் போன்று விமலனார் முடிமேல் விட்டார் 0772-4

124. தலை மிசைச் சுமந்த பள்ளித் தாமத்தைத் தடம் காளத்தி 0773-1
மலை மிசைத் தம்பிரானார் முடி மிசை வணங்கிச் சாத்திச் 0773-2
சிலைமிசைப் பொலிந்த செங்கைத் திண்ணனார் சேர்த்த கல்லை 0773-3
இலை மிசைப் படைத்த ஊனின் திரு அமுது எதிரே வைத்து 0773-4

125. கொழுவிய தசைகள் எல்லாம் கோலினில் தெரிந்து கோத்து அங்கு 0774-1
அழல் உறு பதத்தில் காய்ச்சிப் பல்லினால் அதுக்கி நாவில் 0774-2
பழகிய இனிமை பார்த்துப் படைத்த இவ் இறைச்சி சால 0774-3
அழகிது நாயனீரே அமுது செய்து அருளும் என்றார் 0774-4

126. அன்ன இம் மொழிகள் சொல்லி அமுது செய்வித்த வேடர் 0775-1
மன்னனார் திருக் காளத்தி மலையினார்க்கு இனிய நல் ஊன் 0775-2
இன்னமும் வேண்டும் என்னும் எழு பெரும் காதல் கண்டு 0775-3
பல் நெடும் கரங்கள் கூப்பிப் பகலவன் மலையில் தாழ்ந்தான் 0775-4

127. அவ் வழி அந்தி மாலை அணைதலும் இரவு சேரும் 0776-1
வெவ் விலங்கு உள என்று அஞ்சி மெய்மையின் வேறு கொள்ளாச் 0776-2
செவ்விய அன்பு தாங்கித் திருக் கையில் சிலையும் தாங்கி 0776-3
மை வரை என்ன ஐயர் மருங்கு நின்று அகலா நின்றார் 0776-4

128. சார் அருந் தவங்கள் செய்து முனிவரும் அமரர் தாமும் 0777-1
கார் வரை அடவி சேர்ந்தும் காணுதற்கு அரியார் தம்மை 0777-2
ஆர்வம் முன் பெருக ஆரா அன்பினில் கண்டு கொண்டே 0777-3
நேர் பெற நோக்கி நின்றார் நீள் இருள் நீங்க நின்றார் 0777-4

129. கழை சொரி தரளக் குன்றில் கதிர் நிலவு ஒருபால் பொங்க 0778-1
முழை அரவு உமிழ்ந்த செய்ய மணி வெயில் ஒருபால் மொய்ப்பத் 0778-2
தழை கதிர்ப் பரிதியோடும் சந்திரன் தலை உவாவில் 0778-3
குழை அணி காதர் வெற்பைக் கும்பிடச் சென்றால் ஒக்கும் 0778-4

130. விரவு பல் மணிகள் கான்ற விரிகதிர்ப் படலை பொங்க 0779-1
மரகதம் ஒளி கொள் நீல மணிகளும் இமைக்கும் சோதி 0779-2
பொர இரு சுடருக்கு அஞ்சிப் போயின புடைகள் தோறும் 0779-3
இரவு இருள் ஒதுங்கினாலே போன்று உளது எங்கும் எங்கும் 0779-4

13.1 செம் தழல் ஒளியில் பொங்கும் தீப மா மரங்களாலும் 0780-1
மந்திகள் முழையில் வைத்த மணி விளக்கு ஒளிகளாலும் 0780-2
ஐந்தும் ஆறு அடக்கி உள்ளர் அரும் பெரும் சோதியாலும் 0780-3
எந்தையார் திருக்காளத்தி மலையினில் இரவு ஒன்று இல்லை 0780-4

132. வரும் கறைப் பொழுது நீங்கி மல்கிய யாமம் சென்று 0781-1
சுருங்கிட அறிந்த புள்ளின் சூழ் சிலம்பு ஓசை கேட்டுக் 0781-2
கருங்கடல் என்ன நின்ற கண் துயிலாத வீரர் 0781-3
அரும் பெரும் தம்பிரனார்க்கு அமுது கொண்டு அணைய வேண்டி 0781-4

13.3 ஏறு கால் பன்றியோடும் இருங் கலை புன மான் மற்றும் 0782-1
வேறு வேறு இனங்கள் வேட்டை வினைத் தொழில் விரகினாலே 0782-2
ஊறு செய் காலம் சிந்தித்து உருமிகத் தெரியாப் போதின் 0782-3
மாறு அடு சிலையும் கொண்டு வள்ளலைத் தொழுது போந்தார் 0782-4

134. மொய் காட்டும் இருள் வாங்கி முகம் காட்டும் தேர் இரவி 0783-1
மெய் காட்டும் அன்புடைய வில்லியர் தனி வேட்டை 0783-2
எய் காட்டின் மா வளைக்க இட்ட கரும் திரை எடுத்துக் 0783-3
கை காட்டும் வான் போலக் கதிர் காட்டி எழும் போதில் 0783-4

135. எய்திய சீர் ஆகமத்தில் இயம்பிய பூசனைக்கு ஏற்பக் 0784-1
கொய்த மலரும் புனலும் முதலான கொண்டு அணைந்தார் 0784-2
மை தழையும் கண்டத்து மலை மருந்தை வழி பாடு 0784-3
செய்து வரும் தவம் உடைய முனிவர் சிவ கோசரியார் 0784-4

136. வந்து திருமலையின் கண் வானவர் நாயகர் மருங்கு 0785-1
சிந்தை நியமத்தோடும் செல் கின்றார் திரு முன்பு 0785-2
வெந்த இறைச்சியும் எலும்பும் கண்டு அகல மிதித்து ஓடி 0785-3
இந்த அனுசிதம் கெட்டேன் யார் செய்தார் என்று அழிவார் 0785-4

137. மேவநேர் வர அஞ்சா வேடுவரே இது செய்தார் 0786-1
தேவ தேவ ஈசனே திருமுன்பே இது செய்து 0786-2
போவதே இவ் வண்ணம் புகுத நீர் திரு உள்ளம் 0786-3
ஆவதோ எனப் பதறி அழுது விழுந்து அலமந்தார் 0786-4

138. பொருப்பில் எழும் சுடர்க் கொழுந்தின் பூசனையும் தாழ்க்க நான் 0787-1
இருப்பது இனி என் என்று அவ் இறைச்சி எலும்புடன் இலையும் 0787-2
செருப்பு அடியும் நாய் அடியும் திரு அலகால் மாற்றிய பின் 0787-3
விருப்பின் ஒடும் திருமுகலிப் புனல் மூழ்கி விரைந்து அணைந்தார் 0787-4

139. பழுது புகுந்தது அது தீரப் பவித்திரமாம் செயல் புரிந்து 0788-1
தொழுது பெறுவன கொண்டு தூய பூசனை தொடங்கி 0788-2
வழுவில் திரு மஞ்சனமே வரும் முதலாக வரும் பூசை 0788-3
முழுதும் முறைமையின் முடித்து முதல்வனார் கழல் பணிந்தார் 0788-4

140. பணிந்து எழுந்து தனி முதலாம் பரன் என்று பன் முறையால் 0789-1
துணிந்த மறை மொழியாலே துடி செய்து சுடர்த் திங்கள் 0789-2
அணிந்த சடை முடிக் கற்றை அங்கணரை விடை கொண்டு 0789-3
தணிந்த மனத் திருமுனிவர் தபோ வனத்திடை சார்ந்தார் 0789-4

14.1 இவ் வண்ணம் பெருமுனிவர் ஏகினார் இனி இப்பால் 0790-1
மை வண்ணக் கரும் குஞ்சி வன வேடர் பெருமானார் 0790-2
கை வண்ணச் சிலை வளைத்துக் கான் வேட்டை தனி ஆடிச் 0790-3
செய் வண்ணத் திறம் மொழிவேன் தீவினையின் திறம் ஒழிவேன் 0790-4

142. திரு மலையின் புறம் போன திண்ணனார் செறி துறுகல் 0791-1
பெருமலைகள் இடைச் சரிவில் பெரும் பன்றி புனம் மேய்ந்து 0791-2
வருவனவும் துணி படுத்து மான் இனங்கள் கான் இடை நின்று 0791-3
ஒரு வழிச் சென்று ஏறு துறை ஒளி நின்று கொன்று அருளி 0791-4

143. பயில் விளியால் கலை அழைத்துப் பாடு பெற ஊடு உருவம் 0792-1
அயில் முக வெம் கணை போக்கி அடி ஒற்றி மரை இனங்கள் 0792-2
துயில் இடையில் கிடை செய்து தொடர்ந்து கடமைகள் எய்து 0792-3

வெயில் படு வெம்கதிர் முதிரத் தனி வேட்டை வினை முடித்தார் 0792-4

14.4 பட்ட வன விலங்கு எல்லாம் படர் வனத்தில் ஒரு சூழல் 0793-1
இட்டு அருகு தீக் கடை கோல் இரும் சுரிகை தனை உருவி 0793-2
வெட்டி நறுங் கோல் தேனும் மிக முறித்துத் தேக்கு இலையால் 0793-3
வட்டமுறு பெருங் கல்லை மருங்கு புடை பட அமைத்தார் 0793-4

145. இந்தனத்தை முறித்து அடுக்கி எரி கடையும் அரணியினில் 0794-1
வெம் தழலைப் பிறப்பித்து மிக வளர்த்து மிருகங்கள் 0794-2
கொந்தி அயில் அலகம்பால் குட்டம் இட்டுக் கொழுப்பரிந்து 0794-3
வந்தன கொண்டு எழும் தழலில் வக்குன வக்குவித்து 0794-4

146. வாய் அம்பால் அழிப்பதுவும் வகுப்பதுவும் செய்து அவற்றின் 0795-1
ஆய உறுப்பு இறைச்சி யெலாம் அரிந்து ஒருகல் இலையில் இட்டு 0795-2
காய நெடும் கோல் கோத்துக் கனலின் கண் உறக்காய்ச்சி 0795-3
தூய திரு அமுது அமைக்கச் சுவை காணல் உறுகின்றார் 0795-4

147. எண் நிறைந்த கடவுளருக்கு இடும் உணவு கொண்டு ஊட்டும் 0796-1
வண்ண எரி வாயின் கண் வைத்தது எனக் காளத்தி 0796-2
அண்ணலார்க்கு ஆம் பரிசு தாம் சோதித்து அமைப்பதற்குத் 0796-3
திண்ணனார் திருவாயில் அமைத்தார் ஊன் திரு அமுது 0796-4

148. நல்ல பதம் உற வெந்து நாவின் கண் இடும் இறைச்சி 0797-1
கல்லையினிற் படைத்துத் தேன் பிழிந்து கலந்து கொண்டு 0797-2
வல் விரைந்து திருப் பள்ளித் தாமமும் உந்தூய் மஞ்சனமும் 0797-3
ஒல்லையினின் முன்பு போல் உடன் கொண்டு வந்து அணைந்தார் 0797-4

149. வந்து திருக் காளத்தி மலை ஏறி வனசரர்கள் 0798-1
தம் தலைவனார் இமையோர் தலைவனார் தமை எய்தி 0798-2
அந்தணர் பூசையினை முன்பு போல் அகற்றிய பின் 0798-3
முந்தை முறை தம்முடைய பூசனையின் செயல் முடிப்பார் 0798-4

150. ஊன் அமுது கல்லை உடன் வைத்து இது முன்னையின் நன்றால் 0799-1
ஏனமொடு மான் கலைகள் மரை கடமை இவை இற்றில் 0799-2
ஆன உறுப்பு இறைச்சி அமுது அடியேனும் சுவை கண்டேன் 0799-3
தேனும் உடன் கலந்து இதுதித்திக்கும் என மொழிந்தார் 0799-4

15.1 இப் பரிசு திரு அமுது செய்வித்துத் தம் உடைய 0800-1
ஒப்பரிய பூசனை செய்து அந் நெறியில் ஒழுகுவார் 0800-2
எப்பொழுதும் மேல் மேல் வந்து எழும் அன்பால் காளத்தி 0800-3
அப்பர் எதிர் அல் உறங்கார் பகல் வேட்டை ஆடுவார் 0800-4

152. மா முனிவர் நாள் தோறும் வந்து அணைந்து வன வேந்தர் 0801-1
தாம் முயலும் பூசனைக்குச் சால மிகத் தளர்வு எய்தித் 0801-2
தீமை என அது நீக்கிச் செப்பிய ஆகம விதியால் 0801-3
ஆம் முறையில் அர்ச்சனை செய்து அந் நெறியில் ஒழுவார் ஆல் 0801-4

153. நாணனொடு காடனும் போய் நாகனுக்குச் சொல்லியபின் 0802-1
ஊணும் உறக்கமும் இன்றி அணங்கு உறைவாளையும் கொண்டு 0802-2
பேணும் மகனார் தம் பால் வந்து எல்லாம் பேதித்துக் 0802-3
காணு நெறி தங்கள் குறி வாராமல் கை விட்டார் 0802-4

154. முன்பு திருக் காளத்தி முதல்வனார் அருள் நோக்கால் 0803-1
இன்புறு வேதகத்து இரும்பு பொன் ஆனால் போல் யாக்கைத் 0803-2
தன் பரிசும் வினை இரண்டும் சாரும் மலம் மூன்றும் அற 0803-3
அன்பு பிழம் பாய்த் திரிவார் அவர் கருத்தின் அளவின் அரோ 0803-4

15.5 அந் நிலையில் அன்பனார் அறிந்த நெறி பூசிப்ப 0804-1

மன்னிய ஆகமப் படியால் மாமுனிவர் அருச்சித்து இங்கு 0804-2
என்னுடைய நாயகனே இது செய்தார் தமைக் காணேன் 0804-3
உன்னுடைய திருவருளால் ஒழித்து அருள வேண்டும் என 0804-4

156. அன்று இரவு கனவின் கண் அருள் முனிவர் தம்பாலே 0805-1
மின் திகழும் சடை மவுலி வேதியர் தாம் எழுந்து அருளி 0805-2
வன் திறல் வேடுவன் என்று மற்று அவனை நீ நினையேல் 0805-3
நன்று அவன் தன் செயல் தன்னை நாம் உரைப்பக் கேள் என்று 0805-4

157. அவனுடைய வடிவு எல்லாம் நம் பக்கல் அன்பு என்றும் 0806-1
அவனுடைய அறிவெல்லாம் நமை அறியும் அறிவு என்றும் 0806-2
அவனுடைய செயல் எல்லாம் நமக்கு இனியவாம் என்றும் 0806-3
அவனுடைய நிலை இவ்வாறு அறிநீ என்று அருள் செய்வார் 0806-4

163. உனக்கு அவன் தன் செயல் காட்ட நாளை நீ ஒளித்து இருந்தால் 0807-1
எனக்கு அவன் தன் பரிவு இருக்கும் பரிசு எல்லாம் காண்கின்றாய் 0807-2
மனக் கவலை ஒழிக என்று மறை முனிவர்க்கு அருள் செய்து 0807-3
புனல் சடிலத் திரு முடியார் எழுந்து அருளிப் போனார் 0807-4

164. கனவு நிலை நீங்கிய பின் விழித்து உணர்ந்து கங்குல் இடைப் 0808-1
புனை தவத்து மா முனிவர் புலர் அளவும் கண் துயிலார் 0808-2
மனம் உறும் அற்புதம் ஆகி வரும் பயமும் உடன் ஆகித் 0808-3
துனை புரவித் தனித் தேர் மேல் தோன்றுவான் கதிர் தோன்ற 0808-4

165. முன்னை நாள் போல் வந்து திருமுகலிப் புனல் மூழ்கிப் 0809-1
பன் முறையும் தம்பிரான் அருள் செய்த படி நினைந்து 0809-2
மன்னு திருக் காளத்தி மலை ஏறி முன்பு போல் 0809-3
பிஞ்ஞகனைப் பூசித்துப் பின்பாக ஒளித்திருந்தார் 0809-4

16.6 கரு முகில் என்ன நின்ற கண் படா வில்லியார் தாம் 0810-1
வரு முறை ஆறாம் நாளில் வரும் இரவு ஒழிந்த காலை 0810-2
அருமறை முனிவனார் வந்து அணை வதன் முன்னம் போகித் 0810-3
தருமுறை முன்பு போலத் தனிப் பெரு வேட்டை ஆடி 0810-4

167. மாறு இல் ஊன் அமுதும் நல்ல மஞ்சனப் புனலும் சென்னி 0811-1
ஏறு நாள் மலரும் வெவ் வேறு இயல்பினில் அமைத்துக் கொண்டு 0811-2
தேறுவார்க்கு அமுதம் ஆன செல்வனார் திருக்காளத்தி 0811-3
ஆறு சேர் சடையார் தம்மை அணுக வந்து அணையா நின்றார் 0811-4

168. இத்தனை பொழுது தாழ்த்தேன் என விரைந்து ஏகுவார் முன் 0812-1
மொய்த்த பல் சகுனம் எல்லாம் முறை முறை தீங்கு செய்ய 0812-2
இத் தகு தீய புட்கள் ஈண்ட முன் உதிரம் காட்டும் 0812-3
அதனுக்கு என் கொல் கெட்டேன் அடுத்தது என்று அணையும் போதில் 0812-4

169. அண்ணலார் திருக் காளத்தி அடிகளார் முனிவன் ஆர்க்கு 0813-1
திண்ணனார் பரிவு காட்டத் திரு நயனத்தில் ஒன்று 0813-2
துண் என உதிரம் பாய இருந்தனர் தூரத்தே அவ் 0813-3
வண்ண வெம் சிலையார் கண்டு வல் விரைந்து ஓடி வந்தார் 0813-4

170. வந்தவர் குருதி கண்டார் மயங்கினார் வாயில் நல் நீர் 0814-1
சிந்திடக் கையில் ஊனும் சிலையுடன் சிதறி வீழக் 0814-2
கொந்து அவர் பள்ளித் தாமம் குஞ்சி நின்று அலைந்து சோரப் 0814-3
பைம் தழை அலங்கல் மார்பர் நிலத்து இடைப் பதைத்து வீழ்ந்தார் 0814-4

17.1 விழுந்தவர் எழுந்து சென்று துடைத்தனர் குருதி வீழ்வது 0815-1
ஒழிந்திடக் காணார் செய்வது அறிந்திலர் உயிர்த்து மீள 0815-2
அழிந்து போய் வீழ்ந்தார் தேறி யார் இது செய்தார் என்னா 0815-3
எழுந்தனர் திசைகள் எங்கும் பார்த்தனர் எடுத்தார் வில்லும் 0815-4

172. வாளியும் தெரிந்து கொண்டு இம் மலை இடை எனக்கு மாறா 0816-1
மீளி வெம் மறவர் செய்தார் உளர் கொலோ விலங்கின் சாதி 0816-2
ஆளி முன்னாகி யுள்ள விளைத்தவோ அறியேன் என்று 0816-3
நீள் இரும் குன்றைச் சாரல் நெடிது இடை நேடிச் சென்றார் 0816-4

173. வேடரைக் காணார் தீய விலங்குகள் மருங்கு எங்கும் 0817-1
நாடியும் காணார் மீண்டும் நாயனார் தம்பால் வந்து 0817-2
நீடிய சோகத்தோடு நிறை மலர்ப் பாதம் பற்றி 0817-3
மாடு உறக் கட்டிக் கொண்டு கதறினார் கண்ணீர் வார 0817-4

174. பாவியேன் கண்ட வண்ணம் பரமனார்க்கு அடுத்தது என்னோ 0818-1
ஆவியின் இனிய எங்கள் அத்தனார்க்கு அடுத்தது என்னோ 0818-2
மேவினார் பிரிய மாட்டா விமலனார்க்கு அடுத்தது என்னோ 0818-3
ஆவது ஒன்று அறிகிலேன் யான் என் செய்கேன் என்று பின்னும் 0818-4

175. என் செய்தால் தீருமோ தான் எம்பிரான் திறத்துத் தீங்கு 0819-1
முன் செய்தார் தம்மைக் காணேன் மொய் கழல் வேடர் என்றும் 0819-2
மின் செய்வார் பகழிப் புண்கள் தீர்க்கும் மெய் மருந்து தேடிப் 0819-3
பொன் செய் தாழ் வரையில் கொண்டு வருவன் நான் என்று போனார் 0819-4

176. நினைத்தனர் வேறு வேறு நெருங்கிய வனங்கள் எங்கும் 0820-1
இனத்திடை பிரிந்த செங்கண் ஏறு என வெருக் கொண்டு எய்திப் 0820-2
புனத்து இடைப் பறித்துக் கொண்டு பூத நாயகன்பால் வைத்த 0820-3
மனத்தினும் கடிது வந்து தம் மருந்துகள் பிழிந்து வார்த்தார் 0820-4

17.7 மற்று அவர் பிழிந்து வார்த்த மருந்தினால் திருக் காளத்திக் 0821-1
கொற்றவர் கண்ணில் புண் நீர் குறை படாது இழியக் கண்டும் 0821-2
இற்றையின் நிலைமைக்கு என்னோ இனிச் செயல் என்று பார்ப்பார் 0821-3
உற்ற நோய் தீர்ப்பது ஊனுக்கு ஊன் எனும் உரைமுன் கண்டார் 0821-4

178. இதற்கு இனி என் கண் அம்பால் இடந்து அப்பின் எந்தையார் கண் 0822-1
அதற்கு இது மருந்தாய்ப் புண்ணீர் நிற்கவும் அடுக்கும் என்று 0822-2
மதர்த்து எழும் உள்ளத்தோடு மகிழ்ந்து முன் இருந்து தம் கண் 0822-3
முதல் சரம் அடுத்து வாங்கி முதல்வர் தம் கண்ணில் அப்ப 0822-4

179. நின்ற செம் குருதி கண்டார் நிலத்தின் நின்று ஏறப் பாய்ந்தார் 0823-1
குன்று என வளர்ந்த தோள்கள் கொட்டினார் கூத்தும் ஆடி 0823-2
நன்று நான் செய்த இந்த மதி என நகையும் தோன்ற 0823-3
ஒன்றிய களிப்பினாலே உன் மத்தர் போல மிக்கார் 0823-4

180. வலத்திரு கண்ணில் தம் கண் அப்பிய வள்ளலார் தம் 0824-1
நலத்தினைப் பின்னும் காட்ட நாயனார் மற்றைக் கண்ணில் 0824-2
உலப்பில் செம் குருதி பாயக் கண்டனர் உலகில் வேடர் 0824-3
குலப் பெரும் தவத்தால் வந்து கொள்கையின் உம்பர் மேலார் 0824-4

18.1 கண்டபின் கெட்டேன் எங்கள் காளத்தியார் கண் ஒன்று 0825-1
புண் தரு குருதி நிற்க மற்றைக் கண் குருதி பொங்கி 0825-2
மண்டு மற்று இதனுக்கு அஞ்சேன் மருந்து கை கண்டேன் இன்னும் 0825-3
உண்டு ஒரு கண் அக் கண்ணை இடந்து அப்பி ஒழிப்பேன் என்று 0825-4

182. கண்ணுதல் கண்ணில் தம் கண் இடந்து அப்பில் காணும் நேர்பாடு 0826-1
எண்ணுவர் தம்பிரான் தன் திருக் கண்ணில் இடக்கால் ஊன்றி 0826-2
உள் நிறை விருப்பினோடும் ஒரு தனிப் பகழி கொண்டு 0826-3
திண்ணனார் கண்ணில் ஊன்றத் தரித்திலர் தேவ தேவர் 0826-4

183. செம் கண் வெள் விடையின் பாகர் திண்ணனார் தம்மை ஆண்ட 0827-1
அம் கணர் திருக் காளத்தி அற்புதர் திருக்கை அன்பர் 0827-2

தம் கண் முன் இடக்கும் கையைத் தடுக்க மூன்று அடுக்கு நாக 0827-3
கங்கணர் அமுதவாக்குக் கண்ணப்ப நிற்க என்ற 0827-4

184. கானவர் பெருமானார் தம் கண் இடந்து அப்பும் போதும் 0828-1
ஊனமும் உகந்த ஐயர் உற்று முன் பிடிக்கும் போதும் 0828-2
ஞான மா முனிவர் கண்டார் நான்முகன் முதலாய் உள்ள 0828-3
வானவர் வளர் பூ மாரி பொழிந்தனர் மறைகள் ஆர்ப்ப 0828-4

185. பேறு இனி இதன் மேல் உண்டோ பிரான் திருக் கண்ணில் வந்த 0829-1
ஊறு கண்டு அஞ்சித் தம் கண் இடந்து அப்ப உதவும் கையை 0829-2
ஏறு உயர்த்தவர் தம் கையால் பிடித்துக் கொண்டு என் வலத்தில் 0829-3
மாறு இலாய் நிற்க என்று மன்னு பேர் அருள் புரிந்தார் 0829-4

186. மங்குல் வாழ் திருக் காளத்தி மன்னனார் கண்ணில் புண் நீர் 0830-1
தம் கணால் மாற்றப் பெற்ற தலைவர் தாள் தலைமேல் கொண்டே 0830-2
கங்கை வாழ் சடையார் வாழும் கடவூரில் கலயனாராம் 0830-3
பொங்கிய புகழின் மிக்கார் திருத் தொண்டு புகலல் உற்றேன் 0830-4

11 குங்குலியக் கலய நாயனார் புராணம்

1. வாய்ந்த நீர் வளத்தால் ஓங்கி மன்னிய பொன்னி நாட்டின் 0831-1
ஏய்ந்த சீர் மறையோர் வாழும் எயில் பதி எறி நீர்க் கங்கை 0831-2
தோய்ந்த நீள் சடையார் பண்டு தொண்டர் மேல் வந்த கூற்றைக் 0831-3
காய்ந்த சேவடியார் நீடி இருப்பது கடவூர் ஆகும் 0831-4

2. வயல் எலாம் விளை செம் சாலி வரம்பு எலாம் வளையின் முத்தம் 0832-1
அயல் எலாம் வேள்விச் சாலை அணை எலாம் கழுநீர்க் கற்றை 0832-2
புயல் எலாம் கமுகின் காடு அப்புறம் எலாம் அதன் சீர் போற்றல் 0832-3
செயல் எலாம் தொழில்கள் ஆறே செழும் திருக் கடவூர் என்றும் 0832-4

3. குடங் கையின் அகன்ற உண் கண் கடைசியர் குழுமி ஆடும் 0833-1
இடம் படு பண்ணை தோறும் எழுவன மருதம் பாடல் 0833-2
வடம் புரி முந்நூல் மார்பின் வைதிக மறையோர் செய்கைச் 0833-3
சடங்கு உடை இடங்கள் தோறும் எழுவன சாமம் பாடல் 0833-4

4. துங்க நீள் மருப்பின் மேதி படிந்து பால் சொரிந்த வாவி 0834-1
செம் கயல் பாய்ந்து வாசக் கமலமும் தீம் பால் நாறும் 0834-2
மங்குல் தோய் மாடச் சாலை மருங்கு இறை ஒதுங்கும் மஞ்சும் 0834-3
அங்கு அவை பொழிந்த நீரும் ஆகுதி புகைப்பால் நாறும் 0834-4

5. மருவிய திருவின் மிக்க வளம் பதி அதனில் வாழ்வார் 0835-1
அருமறை முந் நூல் மார்பின் அந்தணர் கலயர் என்பார் 0835-2
பெருநதி அணியும் வேணிப் பிரான் கழல் பேணி நாளும் 0835-3
உருகிய அன்பு கூர்ந்த சிந்தையார் ஒழுக்கம் மிக்கார் 0835-4

6. பாலன் ஆம் மறையோன் பற்ற அபயம் கொடுத்து அருளும் ஆற்றால் 0836-1
மாலும் நான் முகனும் காணா வடிவு கொண்டு எதிரே வந்து 0836-2
காலனார் உயிர் செற்றார்க்குக் கமந்து குங்குலியத் தூபம் 0836-3
சாலவே நிறைந்து விம்ம இடும் பணி தலை நின்றுள்ளார் 0836-4

7. கங்கை நீர் கலிக்கும் சென்னிக் கண் நுதல் எம்பிரார்க்கு 0837-1
பொங்கு குங்குலியத் தூபம் பொலிவு உறப் போற்றிச் செல்ல 0837-2
அங்கு அவர் அருளினாலே வறுமை வந்து அடைந்த பின்னும் 0837-3
தங்கள் நாயகர்க்குத் தாம் முன்செய் பணி தவாமை உய்த்தார் 0837-4

8. இந் நெறி ஒழுகு நாளில் இலம் பாடு நீடு செல்ல 0838-1
நல் நிலம் முற்றும் விற்றும் நாடிய அடிமை விற்றும் 0838-2
பல் நெடும் தனங்கள் மாளப் பயில் மனை வாழ்க்கை தன்னில் 0838-3

மன்னிய சுற்றத்தோடு மக்களும் வருந்தினார்கள் 0838-4

9. யாது ஒன்றும் இல்லை ஆகி இரு பகல் உணவு மாறிப் 0839-1
பேது உறும் மைந்தரோடும் பெருகு சுற்றத்தை நோக்கி 0839-2
காதல் செய் மனைவியார் தம் கணவனார் கலயனார் கைக் 0839-3
கோது இல் மங்கல நூல் தாலி கொடுத்து நெல் கொள்ளும் என்றார் 0839-4

10. அப்பொழுது அதனைக் கொண்டு நெல் கொள்வான் அவரும் போக 0840-1
ஒப்பு இல் குங்குலியம் கொண்டு ஓர் வணிகனும் எதிர் வந்து உற்றான் 0840-2
இப் பொதி என் கொல் என்றார்க்கு உள்ளவாறு இயம்பக் கேட்டு 0840-3
முப்புரி வெண்நூல் மார்பர் முகம் மலர்ந்து இதனைச் சொன்னார் 0840-4

1.1 ஆறு செம் சடைமேல் வைத்த அம் கணர் பூசைக்கு ஆன 0841-1
நாறும் குங்குலியம் ஈதேல் நன்று இன்று பெற்றேன் நல்ல 0841-2
பேறு மற்று இதன் மேல் உண்டோ பெருப் பேறு பெற்று வைத்து 0841-3
வேறு இனிக் கொள்வது என் என்று உரைத்து எழும் விருப்பின் மிக்கார் 0841-4

12. பொன் தரத் தாரும் என்று புகன்றிட வணிகன் தானும் 0842-1
என் தர இசைந்தது என்னத் தாலியைக் கலயர் ஈந்தார் 0842-2
அன்று அவன் அதனை வாங்கி அப் பொதி கொடுப்பக் கொண்டு 0842-3
நின்றிலர் விரைந்து சென்றார் நிறைந்து எழும் களிப்பினோடும் 0842-4

13. விடையவர் வீரட் டானம் விரைந்து சென்று எய்தி என்னை 0843-1
உடையவர் எம்மை ஆளும் ஒருவர் தம் பண்டாரத்தில் 0843-2
அடைவுற ஒடுக்கி எல்லாம் அயர்த்து எழும் அன்பு பொங்கச் 0843-3
சடையவர் மலர்த்தாள் போற்றி இருந்தனர் தமக்கு ஒப்பு இல்லாதார் 0843-4

14. அன்பர் அங்கு இருப்ப நம்பர் அருளினால் அளகை வேந்தன் 0844-1
தன் பெரு நிதியம் தூர்த்துத் தரணி மேல் நெருங்க எங்கும் 0844-2
பொன் பயில் குவையும் நெல்லும் பொருவில் பல் வளனும் பொங்க 0844-3
மன் பெரும் செல்வம் ஆக்கி வைத்தனன் மனையில் நீட 0844-4

15. மற்று அவர் மனைவியாரும் மக்களும் பசியால் வாடி 0845-1
அற்றை நாள் இரவு தன்னில் அயர் உறத் துயிலும் போதில் 0845-2
நல்தவக் கொடியனார்க்கு கனவிடை நாதன் நல்கத் 0845-3
தெற்றென உணர்ந்து செல்வம் கண்ட பின் சிந்தை செய்வார் 0845-4

16. கொம்பனார் இல்லம் எங்கும் குறைவு இலா நிறைவில் காணும் 0846-1
அம் பொனின் குவையும் நெல்லும் அரிசியும் முதலாய் உள்ள 0846-2
எம்பிரான் அருளாம் என்றே இரு கரம் குவித்துப் போற்றித் 0846-3
தம் பெரும் கணவனார்க்குத் திரு அமுது அமைக்கச் சார்ந்தார் 0846-4

17. காலனைக் காய்ந்த செய்ய காலனார் கலயனாராம் 0847-1
ஆலும் அன்பு உடைய சிந்தை அடியவர் அறியும் ஆற்றால் 0847-2
சாலநீ பசித்தாய் உன் தன் தட நெடு மனையில் நண்ணிப் 0847-3
பால் இன் அடிசில் உண்டு பருவரல் ஒழிக என்றார் 0847-4

18. கலையனார் அதனைக் கேளாக் கை தொழுது இறைஞ்சிக் கங்கை 0848-1
அலைபுனல் சென்னியார் தம் அருள் மறுத்து இருக்க அஞ்சித் 0848-2
தலை மிசைப் பணிமேல் கொண்டு சங்கரன் கோயில் நின்று 0848-3
மலை நிகர் மாட வீதி மருங்கு தம் மனையைச் சார்ந்தார் 0848-4

19. இல்லத்தில் சென்று புக்கார் இருநிதிக் குவைகள் ஆர்ந்த என்ன 0849-1
செல்வத்தைக் கண்டு நின்று திரு மனையாரை நோக்கி 0849-2
வில் ஒத்த நுதலாய் இந்த விளைவு எல்லாம் என்கொல் 0849-3
அல் ஒத்த கண்டன் எம்மான் அருள் தர வந்தது என்றார் 0849-4

20. மின் இடை மடவார் கூற மிக்க சீர் கலயனார் தாம் 0850-1

மன்னிய பெரும் செல்வத்து வளம் மலி சிறப்பை நோக்கி 0850-2
என்னையும் ஆளும் தன்மைத்து எந்தை எம்பெருமான் ஈசன் 0850-3
தன் அருள் இருந்த வண்ணம் என்று கை தலைமேல் கொண்டார் 0850-4

21. பதும நல்திருவின் மிக்கார் பரிகலம் திருத்திக் கொண்டு 0851-1
கது மெனக் கணவனாரைக் கண்ணுதற்கு அன்ப ரோடும் 0851-2
விதிமுறை தீபம் ஏந்தி மேவும் இன் அடிசில் ஊட்ட 0851-3
அது நுகர்ந்து இன்பம் ஆர்ந்தார் அருமறைக் கலயனார் தாம் 0851-4

2.2 ஊர் தொறும் பலி கொண்டு உய்க்கும் ஒருவனது அருளினாலே 0852-1
பாரினில் ஆர்ந்த செல்வம் உடையராம் பண்பில் நீடிச் 0852-2
சீர் உடை அடிசில் நல்ல செழுங்கறி தயிர் நெய் பாலால் 0852-3
ஆர் தரு காதல் கூர அடியவர்க்கு உதவும் நாளில் 0852-4

23. செம் கண் வெள் ஏற்றின் பாகன் திருப் பனந் தாளில் மேவும் 0853-1
அம் கணன் செம்மை கண்டு கும்பிட அரசன் ஆர்வம் 0853-2
பொங்கித் தன் வேழம் எல்லாம் பூட்டவும் நேர் நில்லாமைக் 0853-3
கங்குலும் பகலும் தீராக் கவலை உற்று அழுங்கிச் செல்ல 0853-4

24. மன்னவன் வருத்தம் கேட்டு மாசு அறு புகழின் மிக்க 0854-1
நன்னேறி கலயனார் தாம் நாதனை நேரே காணும் 0854-2
அந்நெறி தலை நின்றான் என்று அரசனை விரும்பித் தாமும் 0854-3
மின் நெறித்து அனைய வேணி விகிர்தனை வணங்க வந்தார் 0854-4

25. மழுவுடைச் செய்ய கையர் கோயில்கள் மருங்கு சென்று 0855-1
தொழுது போந்து அன்பினோடும் தொன்மறை நெறி வழாமை 0855-2
முழுது உலகினையும் போற்ற மூன்று எரிபுரப் போர் வாழும் 0855-3
செழு மலர்ச் சோலை வேலித் திருப் பனந் தாளில் சேர்ந்தார் 0855-4

26. காதலால் அரசன் உற்ற வருத்தமும் களிற்றினோடும் 0856-1
தீது இலாச் சேனை செய்யும் திருப்பணி நேர் படாமை 0856-2
மேதினி மிசையே எய்த்து வீழ்ந்து இனைப்பதுவும் நோக்கி 0856-3
மாதவக் கலயர் தாமும் மனத்தினில் வருத்தம் எய்தி 0856-4

27. சேனையும் ஆனை பூண்ட திரளும் எய்த்து எழாமை நோக்கி 0857-1
யானும் இவ் இளைப் புற்று எய்க்கும் இது பெற வேண்டும் என்று 0857-2
தேன் அலர் கொன்றையார் தம் திருமேனிப் பூங்கச் சேய்ந்த 0857-3
மான வன் கயிறு பூண்டு கழுத்தினால் வருந்தல் உற்றார் 0857-4

28. நண்ணிய ஒருமை அன்பின் நாருறு பாசத்தாலே 0858-1
திண்ணிய தொண்டர் பூட்டி இளைத்த பின் திறம்பி நிற்க 0858-2
ஒண்ணுமோ கலயனார் தம் ஒருப்பாடு கண்ட போதே 0858-3
அண்ணலார் நேரே நின்றார் அமரரும் விசும்பில் ஆர்த்தார் 0858-4

29. ஊர் மிசை நெருங்க எங்கும் பரப்பினர் பயில் பூ மாரி 0859-1
தேர் மலி தானை மன்னன் சேனையும் களிறும் எல்லாம் 0859-2
கார் பெறு கானம் போலக் களித்தன கைகள் கூப்பி 0859-3
வார் கழல் வேந்தன் தொண்டர் மலர் அடி தலைமேல் வைத்து 0859-4

30. விண் பயில் புரங்கள் வேவ வைதிகத் தேரில் மேருத் 0860-1
திண்சிலை குனிய நின்றார் செம் நிலைக் காணச் செய்தீர் 0860-2
மண் பகிர்ந்தவனும் காணா மலர் அடி இரண்டும் யாரே 0860-3
மண் புடை அடியார் அல்லால் பரிந்து நேர் காண வந்தார் 0860-4

31. என்று மெய்த் தொண்டர் தம்மை ஏத்தி அங்கு எம்பிரானுக்கு 0861-1
ஒன்றிய பணிகள் மற்றும் உள்ளன பலவும் செய்து 0861-2
நின்ற வெண் கவிகை மன்னன் நீங்கவும் நிகரில் அன்பர் 0861-3
மன்று இடை ஆடல் செய்யும் மலர்க் கழல் வாழ்த்தி வைகி 0861-4

32. சில பகல் கழிந்த பின்பு திருக்கடவூரில் நண்ணி 0862-1
நிலவு தம் பணியில் தங்கி நிகழும் நாள் நிகரில் காழித் 0862-2
தலைவராம் பிள்ளையாரும் தாண்டகச் சதுரராரும் 0862-3
அலர் புகழ் அரசும் கூட அங்கு எழுந்து அருளக் கண்டு 0862-4

3.3 மாறு இலா மகிழ்ச்சி பொங்க எதிர் கொண்டு மனையில் எய்தி 0863-1
ஈறு இலா அன்பின் மிக்கார்க்கு இன் அமுது ஏற்கும் ஆற்றால் 0863-2
ஆறு நல் சுவைகள் ஓங்க அமைத்து அவர் அருளே அன்றி 0863-3
நாறு பூம் கொன்றை வேணி நம்பர் தம் அருளும் பெற்றார் 0863-4

34. கரும்பு வில்லோனைக் கூற்றைக் காய்ந்தவர் கடவூர் மன்னி 0864-1
விருப்பு உறும் அன்பு மேல் மேல் மிக்கு எழும் வேட்கை கூர 0864-2
ஒருப்படும் உள்ளத் தன்மை உண்மையால் தமக்கு நேர்ந்த 0864-3
திருப்பணி பலவும் செய்து சிவ பத நிழலில் சேர்ந்தார் 0864-4

35. தேன் நக்க கோதை மாதர் திரும் நெடும் தாலி மாறிக் 0865-1
கூனல் தண் பிறையினார்க்கு குங்குலியம் கொண்டு உய்த்த 0865-2
பான்மைத் திண் கலயனாரைப் பணிந்து அவர் அருளினாலே 0865-3
மானக்கஞ் சாறர் மிக்க வண்புகழ் வழுத்தல் உற்றேன் 0865-4

12 மானக்கஞ்சாற நாயனார் புராணம்

1. மேல் ஆறு செம் சடை மேல் வைத்தவர் தாம் விரும்பியது 0866-1
நூலாறு நன்கு உணர்வார் தாம் பாடும் நோன்மையது 0866-2
கோல் ஆறு தேன் பொழியக் கொழுங் கனியின் சாறு ஒழுகும் 0866-3
கால் ஆறு வயல் கரும்பின் கழம் சாறூர் கஞ்சாறூர் 0866-4

2. கண் நீலக் கடைசியர்கள் கடுங் களையில் பிழைத்து ஒதுங்கி 0867-1
உண்ணீர்மைப் புணர்ச்சிக் கண் உறைத்து மலர்க்கண் சிவக்கும் 0867-2
தண்ணீர் மென் கழுநீர்க்குத் தடம் சாலி தலை வணங்கும் 0867-3
மண் நீர்மை நலம் சிறந்த வள வயல்கள் உள அயல்கள் 0867-4

3. புயல் காட்டும் கூந்தல் சிறு புறம் காட்டப் புன மயிலின் 0868-1
இயல் காட்டி இடை ஒதுங்க இனம் காட்டும் உழத்தியர்கள் 0868-2
முயல் காட்டும் மதி தோற்கும் முகம் காட்டக் கண் மூரிக் 0868-3
கல் காட்டும் தடங்கள் பல கதிர்காட்டும் தடம் பணைகள் 0868-4

4. சேர் அணி தண் பழன வயல் செழுநெல்லின் கொழுங் கதிர் போய் 0869-1
வேறு அருகு மிடை வேலிப் பைம் கமுகின் மிடறு உரிஞ்சி 0869-2
மாறு எழு திண் குலை வளைப்ப வண்டலை தண் தலை உழவர் 0869-3
தார் அறியும் நெடும் கொடுவாள் அனைய வுள தனி இடங்கள் 0869-4

5. பாங்கு மணிப் பல வெயிலும் சுல வெயிலும் உள மாடம் 0870-1
ஞாங்கு அரணி துகில் கொடியும் நகில் கொடியும் உள அரங்கம் 0870-2
ஓங்கு நிலைத் தோரணமும் பூரண கும்பமும் உளவால் 0870-3
பூம் கணை வீதியில் அணைவோர் புலம் மறுகும் சில மறுகு 0870-4

6. மனை சாலும் நிலை அறத்தின் வழிவந்த வளம் பெருகும் 0871-1
வினை சாலும் உழவு தொழில் மிக்க பெரும் குடி துவன்றிப் 0871-2
புனை சாயல் மயில் அனையார் நடம் புரியப் புகல் முழவம் 0871-3
கனை சாறு மிடை வீதிக் கஞ்சாறு விளங்கியதால் 0871-4

7. அப் பதியில் குலப் பதியாய் அரசர் சேனா பதியாம் 0872-1
செப்ப வரும் குடி விளங்க திரு அவதாரம் செய்தார் 0872-2
மெய்ப் பொருளை அறிந்து உணர்ந்தார் விழுமிய வேளாண் குடிமை 0872-3
வைப்பு அனைய மேன்மையினார் மானக்கஞ் சாறனார் 0872-4

8. பணிவு உடைய வடி உடையார் பணியின் ஓடும் பனி மதியின் 0873-1
அணி உடைய கடை முடியார்க்கு ஆளாகும் பதம் பெற்ற 0873-2
தணிவில் பெரும் பேறுடையார் தம் பெருமான் கழல் சார்ந்த 0873-3
துணிவு உடைய தொண்டர்க்கே ஏவல் செயும் தொழில் பூண்டார் 0873-4

9. மாறு இல் பெரும் செல்வத்தின் வளம் பெருக மற்றது எலாம் 0874-1
ஆறு உலவும் சடைக் கற்றை அந்தணர் தம் அடியாராம் 0874-2
ஈறு இல் பெரும் திரு உடையார் உடையார் என்று இவை யாவும் நேர் 0874-3
கூறும் அதன்முன் அவர் தம் குறிப்பு அறிந்து கொடுத்துள்ளார் 0874-4

10. விரி கடல் சூழ் மண் உலகை விளக்கிய இத் தன்மையர் ஆம் 0875-1
பெரியவர்க்கு முன் சில நாள் பிள்ளைப் பேறு இன்மையினால் 0875-2
அரி அறியா மலர்க் கழல்கள் அறியாமை அரியாதார் 0875-3
வரு மகவு பெறல் பொருட்டு மனத்து அருளால் வழுத்தினார் 0875-4

1.1 குழைக் கலையும் வடி கால் கூத்தனார் அருளாலே 0876-1
மழைக்கு உதவும் பெரும் கற்பின் மனைக் கிழத்தியார் தம்பால் 0876-2
இழைக்கும் வினைப் பயன் சூழ்ந்த இப் பிறவிக்கு கொடும் சூழல் 0876-3
பிழைக்கும் நெறி தமக்கு உதவப் பெண் கொடியைப் பெற்று எடுத்தார் 0876-4

12. பிறந்த பெரு மகிழ்ச்சியினால் பெரு மூதூர் களி சிறப்பச் 0877-1
சிறந்த நிறை மங்கல தூரியம் முழங்கத் தேவர் பிரான் 0877-2
அறம் தலை நின்று அவர்க் கெல்லாம் அளவு இல் வளத்து அருள் பெருக்கிப் 0877-3
புறந் தருவார் போற்றி இசைப்ப பொன் கொடியை வளர்க்கின்றார் 0877-4

13. காப்பு அணியும் இளம் குழவிப் பதம் நீக்கிக் கமழ் சுரும்பின் 0878-1
பூப் பயிலும் சுருள் குழலும் பொலம் குழையும் உடன் தாழ 0878-2
யாப்பு உறும் மென் சிறு மணிமேகலை அணி சிற்றாடை உடன் 0878-3
கோப்பு அமை கிண்கிணி அசையக் குறும் தளிர் மெல் அடி ஒதுங்கி 0878-4

14. புனை மலர் மென் கரங்களினால் போற்றிய தாதியர் நடுவண் 0879-1
மனை அகத்து மணிமுன்றில் மணல் சிற்றில் இழைத்து மணிக் 0879-2
கனை குரல் நூபுரம் அலையக் கழல் முதலாய் பயின்று முலை 0879-3
நனை முகம் செய் முதல் பருவம் நண்ணினள் அப் பெண் அமுதம் 0879-4

15. உறு கலின் மெய்ப் புறம் பொலிய ஒளி நுசுப்பை முலை வருத்த 0880-1
முறுவல் புறம் மலராத முகில் முத்த நகை என்னும் 0880-2
நறு முகை மென் கொடி மருங்குல் நளிர்ச் சுருள் அம் தளிர் செங்கை 0880-3
மறு இல் கொழுந்தினுக்கு மணப் பருவம் வந்து அணைய 0880-4

16. திருமகட்கு மேல் விளங்கும் செம்மணியின் தீபம் எனும் 0881-1
ஒரு மகளை மண் உலகில் ஓங்கு குல மரபினராய்க் 0881-2
கரு மிடற்று மறையவனார் தமர் ஆய கழல் ஏயர் 0881-3
பெரு மகற்கு மகள் பேச வந்து அணைந்தார் பெரு முதியோர் 0881-4

17. வந்த மூது அறிவோரை மானக்கஞ் சாரனார் 0882-1
முந்தை முறைமையின் விரும்பி மொழிந்த மணத் திறம் கேட்டே 0882-2
எம் தமது மரபினுக்குத் தரும் பரிசால் ஏயும் எனச் 0882-3
சிந்தை மகிழ்வு உற உரைத்து மணம் நேர்ந்து செலவிட்டார் 0882-4

18. சென்றவரும் கஞ்சாறர் மணம் இசைந்தபடி செப்பக் 0883-1
குன்று அனைய புயத்து ஏயர் கோனாரும் மிக விரும்பி 0883-2
நின்ற நிலைமையின் இரண்டு திறத்தார்க்கும் நேர்வு ஆய 0883-3
மன்றல் வினை மங்கல நாள் மதிநூல் வல்லவர் வகுத்தார் 0883-4

19. மங்கலம் ஆம் செயல் விரும்பி மகள் பயந்த வள்ளலார் 0884-1
தம் குல நீள் சுற்றம் எலாம் தயங்கு பெரும் களி சிறப்பப் 0884-2
பொங்கிய வெண் முளைப் பெய்து பொலம் கலங்கள் இடை நெருங்கக் 0884-3

கொங்கு அலர் தண் பொழில் மூதூர் வதுவை முகம் கோடித்தார் 0884-4

20. கஞ்சாறர் மகள் கொடுப்பக் கைப் பிடிக்க வருகின்ற 0885-1
எஞ்சாத புகழ்ப் பெருமை ஏயர் குலப் பெருமானும் 0885-2
தம் சால்பு நிறை சுற்றம் தலை நிறைய முரசு இயம்ப 0885-3
மஞ்சு ஆலும் மலர்ச் சோலைக் கஞ்சாற்றின் மருங்கு அணைய 0885-4

21. வள்ளலார் மணம் அவ் ஊர் மருங்கு அணையா முன் மலர்க்கண் 0886-1
ஒள் இழையைப் பயந்தாம் தம் திரு மனையில் ஒரு வழியே 0886-2
தெள்ளுதிரை நீர் உலகம் உய்வதற்கு மற்று அவர்தம் 0886-3
உள்ள நிலைப் பொருளாய உம்பர் பிரான் தாம் அணைவார் 0886-4

2.2 முண்டம் நிறை நெற்றியின் மேல் முண்டித்த திருமுடியில் 0887-1
கொண்ட சிகை முச்சியின் கண் கோத்து அணிந்த எற்பு மணி 0887-2
பண்டு ஒருவன் உடல் அங்கம் பரித்த நாள் அது கடைந்த 0887-3
வெண் தரளம் எனக் காதின் மிசை அசையும் குண்டலமும் 0887-4

23. அவ் என்பின் ஒளி மணிக் கோத்து அணிந்த திருத் தாழ்வடமும் 0888-1
பைவன் பேர் அரவு ஒழியத் தோளில் இடும் பட்டிகையும் 0888-2
மை வந்த நிறக் கேச வடப் பூண் நூலும் மனச் 0888-3
செவ் அன்பர் பவம் மாற்றும் திரு நீற்றுப் பொக்கணமும் 0888-4

24. ஒரு முன் கைத் தனி மணி கோத்து அணிந்த ஒளிர் சூத்திரமும் 0889-1
அரு மறை நூல் கோவணத்தின் மிசை அசையும் திரு உடையும் 0889-2
இரு நிலத்தின் மிசை தோய்ந்த எழுத அரிய திருவடியும் 0889-3
திருவடியில் திருப் பஞ்ச முத்திரையும் திகழ்ந்து இலங்க 0889-4

25. பொடி மூடு தழல் என்னத் திரு மேனி தனில் பொலிந்த 0890-1
படி நீடு திருநீற்றின் பரப்பு அணிந்த பான்மையர் ஆய்க் 0890-2
கொடு நீடு மறுகு அணைந்து தம்முடைய குளிர் கமலத்து 0890-3
அடி நீடும் மனத்து அன்பர் தம் மனையின் அகம் புகுந்தார் 0890-4

26. வந்து அணைந்த மா விரத முனிவரைக் கண்டு எதிர் எழுந்து 0891-1
சிந்தை களி கூர்ந்து மகிழ் சிறந்த பெருந் தொண்டனார் 0891-2
எந்தை பிரான் புரி தவத்தோர் இவ் இடத்தே எழுந்து அருள 0891-3
உய்ந்து ஒழிந்தேன் அடியேன் உன்று உருகிய அன்பொடு பணிந்தார் 0891-4

27. நற்றவர் ஆம் பெருமானார் நலம் மிகும் அன்பரை நோக்கி 0892-1
உற்ற செயல் மங்கலம் இங்கு ஒழுகுவது என் என அடியேன் 0892-2
பெற்றது ஒரு பெண் கொடி தன் வதுவை எனப் பெருந்தவம் 0892-3
மற்று உமக்குச் சோபனம் ஆகுவது என்று வாய் மொழிந்தார் 0892-4

28. ஞானம் செய்தவர் அடி மேல் பணிந்து மனை அகம் நண்ணி 0893-1
மானக்கம் சாறனார் மணக் கோலம் புனைந்து இருந்த 0893-2
தேன் நக்க மலர்க் கூந்தல் திரு மகளைக் கொண்டு அணைந்து 0893-3
பான் அற்கம் தர மறைத்து வரும் அவரைப் பணிவித்தார் 0893-4

29. தம் சரணத்து இடைப் பணிந்து தாழ்ந்து எழுந்த மடக் கொடி தன் 0894-1
மஞ்சு தழைத்து என வளர்ந்த மலர்க் கூந்தல் புறம் நோக்கி 0894-2
அஞ்சலி மெய்த் தொண்டரைப் பார்த்து அணங்கு இவள் தன் மயிர் நமக்குப் 0894-3
பஞ்ச வடிக்கு ஆம் என்றார் பரவ அடித் தலம் கொடுப்பார் 0894-4

30. அருள் செய்த மொழி கேளா அடல் சுரிகைதனை உருவிப் 0895-1
பொருள் செய்தாம் எனப் பெற்றேன் எனக் கொண்டு பூம் கொடி தன் 0895-2
இருள் செய்த கரும் கூந்தல் அடியில் அரிந்து எதிர் நின்ற 0895-3
மருள் செய்த பிறப்பு அறுப்பார் மலர்க் கரத்தினிடை நீட்ட 0895-4

31. வாங்குவார் போல் நின்ற மறைப் பொருளாம் அவர் மறைந்து 0896-1

பாங்கின் மலை வல்லியுடன் பழைய மழவிடை யேறி 0896-2
ஓங்கிய விண் மிசை வந்தார் ஒளி விசும்பின் நிலன் நெருங்கத் 0896-3
தூங்கிய பொன் மலர் மாரி தொழும்பர் தொழுது எதிர் விழுந்தார் 0896-4

32. விழுந்து எழுந்து மெய்ம் மறந்த மெய் அன்பர் தமக்கு மதிக் 0897-1
கொழுந்து அலைய விழும் கங்கை குதித்த சடைக் கூத்தனார் 0897-2
எழும் பரிவு நம் பக்கல் உனக்கு இருந்த பரி சிந்தச் 0897-3
செழும் புவனங்களில் ஏறச் செய்தோம் என்று அருள் செய்தார் 0897-4

3.3 மருங்கு பெரும் கண நாதர் போற்றி இசைப்ப வானவர்கள் 0898-1
நெருங்க விடை மேல் கொண்டு நின்றவர் முன் நின்றவர்தாம் 0898-2
ஒருங்கிய நெஞ்சொடு கரங்கள் உச்சியின் மேல் குவித்து ஐயர் 0898-3
பெரும் கருணைத் திறம் போற்றும் பெரும் பேறு நேர் பெற்றார் 0898-4

34. தொண்டனார் தமக்கு அருளிச் சூழ்ந்து இமையோர் துதி செய்ய 0899-1
இண்டை வார் சடை முடியார் எழுந்து அருளிப் போயினார் 0899-2
வண்டுவார் குழல் கொடியைக் கைப் பிடிக்க மணக் கோலம் 0899-3
கண்டவர்கள் கண் களிப்பக் கலிக் காமனார் புகுந்தார் 0899-4

35. வந்து அணைந்த ஏயர் குல மன்னவனார் மற்று அந்தச் 0900-1
சிந்தை நினைவு அரிய செயல் செறிந்தவர் பால் கேட்டருளிப் 0900-2
புந்தியினில் மிக உவந்து புனிதனார் அருள் போற்றிச் 0900-3
சிந்தை தளர்ந்து அருள் செய்த திருவாக்கின் திறம் கேட்டு 0900-4

36. மனம் தளரும் இடர் நீங்கி வானவர் நாயகர் அருளால் 0901-1
புனைந்த மலர்க் குழல் பெற்ற பூம் கொடியை மணம் புரிந்து 0901-2
தனம் பொழிந்து பெரு வதுவை உலகெலாம் தலை சிறப்ப 0901-3
இனம் பெருகத் தம்முடைய எயின் மூதூர் சென்று அணைந்தார் 0901-4

37. ஒரு மகள் கூந்தல் தன்னை வதுவை நாள் ஒருவர்க்கு ஈந்த 0902-1
பெருமையார் தன்மை போற்றும் பெருமை என் அளவிற்று ஆமே 0902-2
மருவிய அமரில் புக்க மா வடு விடேல் என் ஓசை 0902-3
உரிமையால் கேட்க வல்லார் திறம் இனி உரைக்கல் உற்றேன் 0902-4

## 13 அரிவாட்டாய நாயனார் புராணம்

1@ வரும் புனல் பொன்னி நாட்டு ஒரு வாழ் பதி 0903-1
அரும்பு வண்டு ஒடு சூழ்ந்து முரன்றிட 0903-2
விரும்பு மென் கண் உடையவாய் விட்டு நீள் 0903-3
கரும்பு தேன் பொழியும் கணமங்கலம் 0903-4

2. செந்நெல்லார் வயல் காட்ட செம் தாமரை 0904-1
முன்னர் நந்து உமிழ் முத்தம் சொரிந்திடத் 0904-2
துன்னு மள்ளர் கைம் மேற் கொண்டு தோன்றுவார் 0904-3
மன்னு மங்கய மா நிதி போன்று உளார் 0904-4

3. வளத்தில் நீடும் பதியதன் கண்வரி 0905-1
உளர்த்தும் ஐம்பால் உடையோர் முகத்தினும் 0905-2
களத்தின் மீதும் கயல்பாய் வயல் அயல் 0905-3
குளத்தும் நீளும் குழை உடை நீலங்கள் 0905-4

4. அக் குல பதி தன்னில் அறநெறித் 0906-1
தக்க மா மனை வாழ்க்கையில் தங்கினார் 0906-2
தொக்க மா நிதித் தொன்மையில் ஓங்கிய 0906-3
மிக்க செல்வத்து வேளாண் தலைமையார் 0906-4

5. தாயனார் எனும் நாமம் தரித்து உள்ளார் 0907-1
சேய காலம் தொடர்ந்தும் தெளிவு இலா 0907-2

மாயனார் மண் கிளைத்து அறியாத அத் 0907-3
தூய நாண் மலர்ப் பாதம் தொடர்ந்து உள்ளார் 0907-4

6. மின்னும் செம் சடை வேதியர்க்கு ஆம் என்று 0908-1
செந் நெல் இன் அமுதோடு செம் கீரையும் 0908-2
மன்னு பைந்துணர் மா வடுவும் கொணர்ந்து 0908-3
அன்ன என்றும் அமுது செய்விப்பார் ஆல் 0908-4

7. இந்த நல் நிலை இன்னல் வந்து எய்தினும் 0909-1
சிந்தை நீங்காச் செயலின் உவந்திட 0909-2
முந்தை வேத முதல்வர் அவர் வழி 0909-3
வந்த செல்வம் அறியாமை மாற்றினார் 0909-4

8. மேவும் செல்வம் களிறு உண் விளங்கனி 0910-1
ஆவது ஆகி அழியவும் அன்பினால் 0910-2
பாவை பங்கர்க்கு முன்பு பயின்ற அத் 0910-3
தாவினால் செய்கை தவிர்ந்து இலர் தாயனார் 0910-4

9. அல்லல் நல்குரவு ஆயிடக் கூலிக்கு 0911-1
நெல் அறுத்து மெய்ந் நீடிய அன்பினால் 0911-2
நல்ல செம் நெலில் பெற்றன நாயனார்க்கு 0911-3
ஒல்லை இன் அமுது ஆக் கொண்டு ஒழுகுவார் 0911-4

10. சாலி தேடி அறுத்தவை தாம் பெறும் 0912-1
கூலி எல்லாம் திரு அமுதாக் கொண்டு 0912-2
நீல நெல்லரி கூலி கொண்டு உண்ணும் நாள் 0912-3
மால் அயற்கு அரியார் அது மாற்றுவார் 0912-4

11. நண்ணிய வயல்கள் எல்லாம் நாள் தொறும் முன்னம் காண 0913-1
வண்ணவார் கதிர்ச் செம் சாலி ஆக்கிட மகிழ்ந்து சிந்தை 0913-2
அண்ணலார் அறுத்த கூலி கொண்டு இஃது அடியேன் செய்த 0913-3
புண்ணியம் என்று போத அமுது செய்விப்பார் ஆனார் 0913-4

12. வைகலும் உணவு இலாமை மனைப் படப்பையினில் புக்கு 0914-1
நை கரம் இல்லா அன்பின் நங்கை கை அடகு கொய்து 0914-2
பெய் கலத்து அமைத்து வைக்கப் பெருந்தகை அருந்தித் தங்கள் 0914-3
செய் கடன் முட்டா வண்ணம் திருப்பணி செய்யும் நாளில் 0914-4

13. மனை மருங்கு அடகு மாள வட நெடு வான மீனே 0915-1
அனையவர் தண்ணீர் வார்க்க அமுது செய்து அன்பனாரும் 0915-2
வினை செயல் முடித்துச் செல்ல மேவும் நாள் ஒருநாள் மிக்க 0915-3
முனைவனார் தொண்டர்க்கு அங்கு நிகழ்ந்தது மொழியப் பெற்றேன் 0915-4

14. முன்பு போல் முதல்வனாரை அமுது செய்விக்க மூளும் 0916-1
அன்பு போல் தூய செந்நெல் அரிசி மாவடு மென் கீரை 0916-2
துன்பு போம் மனத்துத் தொண்டர் கூடையில் சுமந்து போகப் 0916-3
பின்பு போம் மனைவியார் ஆன் பெற்ற அஞ்சு ஏந்திச் சென்றார் 0916-4

15. போதரா நின்ற போது புலர்ந்து கால் தளர்ந்து தப்பி 0917-1
மாதரார் வருந்தி வீழ்வார் மட்கலம் மூடும் கையால் 0917-2
காதலால் அணைத்தும் எல்லாம் கமர் இடைச் சிந்தக் கண்டு 0917-3
பூத நாயகர் தம் தொண்டர் போவது அங்கு இனி ஏன் என்று 0917-4

16. நல்ல செம் கீரை தூய மாவடு அரிசி சிந்த 0918-1
அல்லல் தீர்த்து ஆள வல்லார் அமுது செய்து அருளும் அப்பேறு 0918-2
எல்லை இல் தீமையேன் இங்கு எய்திடப் பெற்றிலேன் என்று 0918-3
ஒல்லை இல் அரிவாள் பூட்டி ஊட்டியை அரியல் உற்றார் 0918-4

17.  ஆட் கொள்ளும் ஐயர் தாம் இங்கு அமுது செய்திலர் கொல் என்னாப் 0919-1
பூட்டிய அரிவாள் பற்றிப் புரை அற விரவும் அன்பு 0919-2
காட்டிய நெறியின் உள்ளம் தண்டு அறக் கழுத்தினோடே 0919-3
ஊட்டியும் அரிய நின்றார் உறுப்பு இறப் பரிவார் ஒத்தார் 0919-4

18. மாசு அறு சிந்தை அன்பர் கழுத்து அரி அரிவாள் பற்றும் 0920-1
ஆசில் வண் கையை மாற்ற அம்பலத்து ஆடும் ஐயர் 0920-2
வீசிய செய்ய கையும் மாவடு விடேல் விடேல் என் 0920-3
ஓசையும் கமரில் நின்றும் ஒக்கவே எழுந்த அன்றே 0920-4

19. திருக்கை சென்று அரிவாள் பற்றும் திண் கையைப் பிடித்த போது 0921-1
வெருக்கொடு தம் கூறு நீங்க வெவ் வினை விட்டு நீங்கிப் 0921-2
பெருக்கவே மகிழ்ச்சி நீடத் தம்பிரான் பேணித் தந்த 0921-3
அருட் பெரும் கருணை நோக்கி அஞ்சலி கூப்பி நின்று 0921-4

20.  அடியனேன் அறிவு இலாமை கண்டும் என் அடிமை வேண்டிப் 0922-1
படி மிசைக் கமரில் வந்து இங்கு அமுது செய் பரனே போற்றி 0922-2
துடி இடை பாகா மான தூய நல் சேதி போற்றி 0922-3
பொடி அணி பவள மேனிப் புரி சடைப் புராண போற்றி 0922-4

21. என்று அவர் போற்றி செய்ய இடப வாகனர் ஆய்த் தோன்றி 0923-1
நன்று நீ புரிந்த செய்கை நல்நுதல் உடனே கூட 0923-2
என்றும் நம் உலகில் வாழ்வாய் என்று அவர் உடனே நண்ண 0923-3
மன்றுளே ஆடும் ஐயர் மழ விடை உகைத்துச் சென்றார் 0923-4

22. பரிவு உறு சிந்தை அன்பர் பரம் பொருளாகி உள்ள 0924-1
பெரியவர் அமுது செய்யப் பெற்றிலேன் என்று மாவின் 0924-2
வரிவடு விடேல் எனா முன் வன் கழுத்து அரிவாள் பூட்டி 0924-3
அரிதலால் அரிவாட்டு ஆயர் ஆயினார் தூய நாமம் 0924-4

23. முன்னிலை கமரே யாக முதல்வனார் அமுது செய்யச் 0925-1
செம் நெலின் அரிசி சிந்தச் செவி உற வடுவின் ஓசை 0925-2
அந் நிலை கேட்ட தொண்டர் அடி இணை தொழுது வாழ்த்தி 0925-3
மன்னும் ஆனாயர் செய்கை அறிந்தவாறு வழுத்தல் உற்றேன் 0925-4

14  ஆனாய நாயனார் புராணம்

1. மாடு விரைப் பொலி சோலையின் வான் மதி வந்து ஏறச் 0926-1
சூடு பரப்பிய பண்ணை வரம்பு சுரும்பு ஏற 0926-2
ஈடு பெருக்கிய போர்களின் மேகம் இளைத்து ஏற 0926-3
நீடு வளத்தது மேன்மழநாடு என்னும் நீர் நாடு 0926-4

2. நீவி நிதம்ப உழத்தியர் நெய்க் குழல் மைச் சூழல் 0927-1
மேவி உறங்குவ மென் சிறை வண்டு விரைக் கஞ்சப் 0927-2
பூவில் உறங்குவ நீள் கயல் பூ மலை தே மாவின் 0927-3
காவின் நறுங் குளிர் நீழல் உறங்குவ கார் மேதி 0927-4

3. வன்னிலை மள்ளர் உகைப்ப எழுந்த மரக்கோவை 0928-1
பன் முறை வந்து எழும் ஓசை பயின்ற முழக்கத்தால் 0928-2
அன்னம் மருங்கு உறை தண் துறை வாவி அதன் பாலைக் 0928-3
கன்னல் அடும் புகையால் முகில் செய்வ கருப்பாலை 0928-4

4. பொங்கிய மா நதி நீடு அலை உந்து புனல் சங்கம் 0929-1
துங்க இலைக் கதலிப் புதல் மீது தொடங்கிப் போய் 0929-2
தங்கிய பாசடை சூழ் கொடி யூடு தவழ்ந்து ஏறிப் 0929-3
பைம் கமுகின் தலை முத்தம் உதிர்க்குவ பாளை என 0929-4

5. அல்லி மலர்ப் பழனத்து அயல் நாடு இள ஆன் ஈனும் 0930-1

ஒல்லை முழுப்பை உகைப்பின் உழக்கு குழக்கன்று 0930-2
கொல்லை மடக்குல மான் மறியோடு குதித்து ஓடும் 0930-3
மல்கு வளத்தது முல்லை உடுத்த மருங்கு ஓர்பால் 0930-4

6. கண் மலர் காவிகள் பாய இருப்பன கார் முல்லைத் 0931-1
தண் நகை வெண் முகை மேவும் சுரும்பு தடம் சாலிப் 0931-2
பண்ணை எழும் கயல் பாய இருப்பன காயாவின் 0931-3
வண்ண நறும் சினை மேவிய வன் சிறை வண்டானம் 0931-4

7. பொங்கரில் வண்டு புறம்பு அலை சோலைகள் மேல் ஓடும் 0932-1
வெம் கதிர் தங்க விளங்கிய மேல் மழ நல் நாடாம் 0932-2
அங்கு அது மண்ணின் அரும் கலமாக அதற்கே ஓர் 0932-3
மங்கலம் ஆனது மங்கலம் ஆகிய வாழ் மூதூர் 0932-4

8. ஒப்பு இல் பெரும் குடி நீடிய தன்மையில் ஓவாமே 0933-1
தப்பு இல் வளங்கள் பெருக்கி அறம் புரி சால்போடும் 0933-2
செப்ப உயர்ந்த சிறப்பின் மலிந்தது சீர் மேவும் 0933-3
அப்பதி மன்னிய ஆயர் குலத்தவர் ஆனாயர் 0933-4

9. ஆயர் குலத்தை விளக்கிட வந்து உதயம் செய்தார் 0934-1
தூய சுடர்திரு நீறு விரும்பு தொழும்பு உள்ளார் 0934-2
வாயின் இன் மெய்யின் வழுத்து மனத்தின் வினைப் பாலில் 0934-3
பேய் உடன் ஆடு பிரான் அடி அல்லது பேணாதார் 0934-4

10. ஆன் நிரை கூட அகன் புற வில் கொடு சென்று ஏறிக் 0935-1
கான் உறை தீய விலங்கு உறு நோய்கள் கடிந்து எங்கும் 0935-2
தூ நறு மென் புல் அருந்தி விரும்பிய தூ நீர் உண்டு 0935-3
ஊனம் இல் ஆயம் உலப்பில பல்க அளித்து உள்ளார் 0935-4

11. கன்றொடு பால் மறை நாகு கறப்பன பால் ஆவும் 0936-1
புன் தலை மென் சிலை ஆன் ஒடு நீடு புனிற்று ஆவும் 0936-2
வென்றி விடைக் குலம் ஓடும் இனம் தொறும் வெவ்வேறே 0936-3
துன்றி நிறைந்து உள சூழல் உடன் பல தோழங்கள் 0936-4

12. ஆவின் நிரைக் குலம் அப்படி பல்க அளித்து என்றும் 0937-1
கோவலர் ஏவல் புரிந்திட ஆயர் குலம் பேணும் 0937-2
காவலர் தம் பெருமான் அடி அன்பு உறு கானத்தின் 0937-3
மேவு துளைக் கருவிக் குழல் வாசனை மேல் கொண்டார் 0937-4

13. முந்தை மறை நூல் மரபின் மொழிந்த முறை எழுந்த வேய் 0938-1
அந்த முதல் நால் இரண்டில் அரிந்து நரம்பு உறு தானம் 0938-2
வந்த துளை நிரை யாக்கி வாயு முதல் வழங்கு துளை 0938-3
அந்தம் இல் சீர் இடை ஈட்டின் அங்குலி எண் களின் அமைத்து 0938-4

14. எடுத்த குழல் கருவியினில் எம்பிரான் எழுத்து அஞ்சும் 0939-1
தொடுத்த முறை ஏழ் இசையின் சுருதி பெற வாசித்து 0939-2
அடுத்த சறா சரங்கள் எலாம் தங்க வரும் தம் கருணை 0939-3
அடுத்த இசை அமுது அளித்துச் செல்கின்றார் அங்கு ஒரு நாள் 0939-4

15. வாச மலர்ப் பிணை பொங்க மயிர் நுழுதி மருங்கு உயர்ந்த 0940-1
தேசு உடைய சிகழிகையில் செறி கண்ணித் தொடை செருகிப் 0940-2
பாசிலை மென் கொடியின் வடம் பயில நறு விலி புனைந்து 0940-3
காசு உடை நாண் அதற்கு அயலே கரும் சுருளின் புறம் காட்டி 0940-4

16. வெண் கோடல் இலைச் சுருளில் பைந் தோட்டு விரைத் தோன்றித் 0941-1
தண் கோல மலர் புனைந்த வடி காதின் ஒளி தயங்கத் 0941-2
திண் கோல நெற்றியின் மேல் திரு நீற்றின் ஒளி கண்டோர் 0941-3
கண் கோடல் நிறைந்தார் ஆகக் கவின் விளங்க மிசை அணிந்து 0941-4

17. நிறைந்த நீறு அணி மார்பின் நிரை முல்லை முகை சுருக்கிச் 0942-1
செறிந்த புனை வடம் தாழத் திரள் தோளின் புடை அலங்கல் 0942-2
அறைந்த சுரும்பு இசை அரும்ப அரை உடுத்த மரவுரியின் 0942-3
புறம் தழையின் மலி தானைப் பூம் பட்டுப் பொலிந்து அசைய 0942-4

18. சேவடியில் தொடு தோலும் செம் கையினில் வெண் கோலும் 0943-1
மேவும் இசை வேய்ங் குழலும் மிக விளங்க வினை செய்யும் 0943-2
காவல் புரி வல் ஆயர் கன்று உடை ஆன் நிரை சூழப் 0943-3
பூ அலர் தார்க் கோவலனார் நிரை காக்கப் புறம் போந்தார் 0943-4

19. நீல மா மஞ்ஞை ஏங்க நிரை கொடிப் புறவம் பாடக் 0944-1
கோல வெண் முகை யேர் முல்லை கோபம் வாய் முறுவல் காட்ட 0944-2
ஆலும் மின்னிடைச் சூழ் மாலைப் பயோதரம் அசைய வந்தாள் 0944-3
ஞாலம் நீடு அரங்கில் ஆடக் கார் எனும் பருவ நல்லாள் 0944-4

20. எம் மருங்கும் நிரை பரப்ப எடுத்த கோல் உடைப் பொதுவர் 0945-1
தம் மருங்கு தொழுது அணையத் தண் புறவில் வரும் தலைவர் 0945-2
அம் மருங்கு தாழ்ந்த சினை அலர் மருங்கு மது உண்டு 0945-3
செம் மரும் தண் சுரும்பு சுழல் செழும் கொன்றை மருங்கு அணைந்தார் 0945-4

21. சென்று அணைந்த ஆனாயர் செய்த விரைத் தாமம் என 0946-1
மன்றல் மலர்த்துனர் தூக்கி மருங்குதாழ் சடையார் போல் 0946-2
நின்ற நறும் கொன்றையினை நேர் நோக்கி நின்று உருகி 0946-3
ஒன்றிய சிந்தையில் அன்பை உடையவர் பால் மடை திறந்தார் 0946-4

22. அன்பு ஊறி மிசைப் பொங்கும் அமுத இசைக் குழல் ஒலியால் 0947-1
வன் பூதப் படையாளி எழுத்து ஐந்தும் வழுத்தித் தாம் 0947-2
முன் பூதி வரும் அளவின் முறைமையே எவ் உயிரும் 0947-3
என்பூடு கரைந்து உருக்கும் இன் இசை வேய்ங் கருவிகளில் 0947-4

23. ஏழு விரல் இடை இட்ட இன் இசை வங்கியம் எடுத்துத் 0948-1
தாழும் மலர் வரி வண்டு தாது பிடிப்பன போலச் 0948-2
சூழும் முரன்று எழ நின்று தூய பெரும் தனித் துளையில் 0948-3
வாழிய நம் தோன்றலார் மணி அதரம் வைத்து 0948-4

24. முத்திரையே முதல் அனைத்தும் முறைத் தானம் சோதித்து 0949-1
வைத்த துளை ஆராய்ச்சி வக்கரனை வழி போக்கி 0949-2
ஒத்த நிலை உணர்ந்து அதற்பின் ஒன்று முதல் படி முறையாம் 0949-3
அத் தகைமை ஆரோசை அமர் ஓசைகளின் அமைத்தார் 0949-4

25. மாறு முதல் பண்ணின் பின் வளர் முல்லைப் பண் ஆக்கி 0950-1
ஏறிய தாரமும் உழையும் கிழமை கொள இடும் தானம் 0950-2
ஆறு உலாவும் சடை முடியார் அஞ்சு எழுத்தின் இசை பெருகக் 0950-3
கூறிய பட்டு அடைக்குரல் ஆம் கொடிப் பாலையினில் நிறுத்தி 0950-4

26. ஆய இசைப் புகல் நான்கின் அமைந்த புகல் வகை எடுத்து 0951-1
மேய துளை பற்றுவன விடுபன ஆம் விரல் நிரையில் 0951-2
சேய வொளி இடை அலையத் திருவாளன் எழுத்து அஞ்சும் 0951-3
தூய இசைக் கிளை கொள்ளும் துறை ஐஞ்சின் முறை விளைத்தார் 0951-4

27. மந்தரத்தும் மத்திமத்தும் தாரத்தும் வரன் முறையால் 0952-1
தந்திரிகள் மெலிவித்தும் சமம் கொண்டும் வலிவித்தும் 0952-2
அந்தரத்து விரல் தொழில்கள் அளவு பெற அசைத்து இயக்கிச் 0952-3
சுந்தரச் செம் கனிவாயும் துளைவாயும் தொடக்கு உண்ண 0952-4

28. எண்ணிய நூல் பெருவண்ணம் இடை வண்ணம் வனப்பு என்னும் 0953-1
வண்ண இசை வகை எல்லாம் மா துரிய நாதத்தில் 0953-2

நண்ணிய பாணியும் இயலும் தூக்கும் நடை முதல் கதியில் 0953-3
பண் அமைய எழும் ஓசை எம் மருங்கும் பரப்பினார் 0953-4

29. வள்ளலார் வாசிக்கும் மணித் துளைவாய் வேய்ங் குழலின் 0954-1
உள் உறை அஞ்சு எழுத்து ஆக ஒழுகி மதுர ஒலி 0954-2
வெள்ளம் நிறைந்து எவ்வுயிர்க்கும் மேல் அமரர் தருவிளை தேன் 0954-3
தெள் அமுதின் உடன் கலந்து செவி வார்ப்பது எனத் தேக்க 0954-4

30. ஆன் நிரைகள் அறுகு அருந்தி அசை விடாது அணைந்து அயரப் 0955-1
பால் நுரை வாய்த் தாய் முலைப் பால் பற்றும் இளம் கன்று இனமும் 0955-2
தான் உணவு மறந்து ஒழியத் தட மருப்பின் விடைக் குலமும் 0955-3
மான் முதலாம் கான் விலங்கு மயிர் முகிழ்த்து வந்து அணைய 0955-4

31. ஆடு மயில் இனங்களும் அங்கு அசைவு அயர்ந்து மருங்கு அணுக 0956-1
ஊடு செவி இசை நிறைந்த உள்ளம் ஒடு புள் இனமும் 0956-2
மாடு படிந்து உணர்வு ஒழிய மருங்கு தொழில் புரிந்து ஒழுகும் 0956-3
கூடிய வண் கோவலரும் குறை வினையின் துறை நின்றார் 0956-4

32. பணி புவனங்களில் உள்ளார் பயில் பிலங்கள் வழி அணைந்தார் 0957-1
மணி வரை வாழ் அர மகளிர் மருங்கு மயங்கினர் மலிந்தார் 0957-2
தணிவு இல் ஒளி விஞ்சையர்கள் சாரணர் கின்னரர் அமரர் 0957-3
அணி விசும்பில் அயர்வு எய்தி விமானங்கள் மிசை அணைந்தார் 0957-4

33. சுர மகளிர் கற்பகப் பூஞ் சோலைகளின் மருங்கு இருந்து 0958-1
கர மலரின் அமுது ஊட்டும் கனி வாய் மென் கிள்ளையுடன் 0958-2
விரவு நறும் குழல் அலைய விமானங்கள் விரைந்து ஏறிப் 0958-3
பரவிய ஏழ் இசை அமுதம் செவி மடுத்துப் பருகினார் 0958-4

34. நலிவாரும் மெலிவாரும் உணர்வு ஒன்றாய் நயத்திலினால் 0959-1
மலி வாய் வெள் எயிற்று அரவம் மயில் மீது மருண்டு விழும் 0959-2
சலியாத நிலை அரியும் தடம் கரியும் உடன் சாரும் 0959-3
புலி வாயின் மருங்கு அணையும் புல் வாய புல் வாயும் 0959-4

35. மருவிய கால் விசைத்து அசையா மரங்கள் மலர்ச் சினை சலியா 0960-1
கருவரை வீழ் அருவிகளும் கான் ஆறும் கலித்து ஓடா 0960-2
பெரு முகிலின் குலங்கள் புடை பெயர்வு ஒழியப் புனல் சோரா 0960-3
இரு விசும்பின் இடை முழங்கா எழு கடலும் இடை துளும்பா 0960-4

36. இவ்வாறு நிற்பனவும் சரிப்பனவும் இசை மயமாய் 0961-1
மெய் வாழும் புலன் கரணம் மேவிய ஒன்று ஆயின ஆல் 0961-2
மொய் வாச நறும் கொன்றை முடிச் சடையார் அடித் தொண்டர் 0961-3
செவ் வாயின் மிசை வைத்த திருக் குழல் வாசனை உருக்க 0961-4

37. மெய் அன்பர் மனத்து அன்பின் விளைந்த இசைக் குழல் ஓசை 0962-1
வையம் தன்னையும் நிறைத்து வானம் தன் வய மாக்கிப் 0962-2
பொய் அன்புக்கு எட்டாத பொற் பொதுவில் நடம் புரியும் 0962-3
ஐயன் தன் திருச் செவியின் அருகு அணைய பெருகியது ஆல் 0962-4

38. ஆனாயர் குழல் ஓசை கேட்டு அருளி அருள் கருணை 0963-1
தான் ஆய திரு உள்ளம் உடைய தவ வல்லியுடன் 0963-2
கான் ஆதி காரணர் ஆம் கண் நுதலார் விடை உகைத்து 0963-3
வான் ஆறு வந்து அணைந்தார் மதி நாறும் சடை தாழ 0963-4

39. திசை முழுதும் கண நாதர் தேவர்கட்கு முன் நெருங்கி 0964-1
மிசை மிடைந்து வரும் பொழுது வேற்று ஒலிகள் விரவாமே 0964-2
அசைய எழும் குழல் நாதத்து அஞ்சு எழுத்தால் தமைப் பரவும் 0964-3
இசை விரும்பும் கூத்தனார் எழுந்து அருளி எதிர் நின்றார் 0964-4

40. முன் நின்ற மழ விடை மேல் முதல்வனார் எப்பொழுதும் 0965-1
செம் நின்ற மனப் பெரியோர் திருக் குழல் வாசனை கேட்க 0965-2
இந் நின்ற நிலையே நம்பால் அணைவாய் என அவரும் 0965-3
அந் நின்ற நிலை பெயர்ப்பார் ஐயர் திரு மருங்கு அணைந்தார் 0965-4

41. விண்ணவர்கள் மலர் மாரி மிடைந்து உலகம் மிசை விளங்க 0966-1
எண்ணில் அரு முனிவர் குழாம் இருக்கு மொழி எடுத்து ஏத்த 0966-2
அண்ணலார் குழல் கருவி அருகு இசைத்து அங்கு உடன் செல்லப் 0966-3
புண்ணியனார் எழுந்து அருளிப் பொன் பொதுவின் இடைப் புக்கார் 0966-4

சுந்தரமூர்த்தி சுவாமிகள் துதி

1. தீது கொள் வினைக்கு வாரோம் செம் சடைக் கூத்தர் தம்மைக் 0967-1
காது கொள் குழைகள் வீசும் கதிர் நிலவு இருள் கால் சீப்ப 0967-2
மாது கொள் புலவி நீக்க மனை இடை இரு கால் செல்லத் 0967-3
தூது கொள்பவராம் நம்மைத் தொழும்பு கொண்டு உரிமை கொள்வார் 0967-4

---

This file was last revised on 08 May 2004

---

See Also:
1. Stories of the nAyanmAr in English with Pictures

Back to periya purANam Page
Back to thirumuRai Page
Back to Shaiva Sidhdhantha Home Page